Sectt. II-46—23,368—9-2-20.

# Home (1920) Department.

(Miscellaneous)

Ordinary SERIES.

**G.O. No.** 1283

**DATED** 7-8-20

[Despatch Abstract.]

Editor's Table Privileges----Samarasabodhini--Declined

PAPERS PUT UP WITH CURRENT No.

Papers of the department to which the current belongs.

| Number. | Date. | Original (=O.) or spare copy (= S.C.). | Remarks. (In this column such of the papers as have been removed for copying, printing, etc., should be marked with a cross.) | Initials of Referencer with date in token of return to Reference department |
|---|---|---|---|---|
| | | | | |

Papers of other departments.

| Department. | Number | Date. | Original (= O.) or spare copy (= S. C.). | Initials with date of (1) Referencer acknowledging returns of the paper concerned or (2) Despatcher to denote the return of the papers to the department concerned. |
|---|---|---|---|---|
| | | | | |

M1-3/ Mi 3482

Mi 3482/12 7 20

~~Slip~~

THE SAMARASA BODHINI OFFICE,
YELLAIAMMAN KOIL ST.,
TANJORE.

8' July 1920.

From. E. Suryanarayana Ayyar,
B.A., B.L.
Editor, "Samarasa-Bodhini"
Tanjore

To,
The Secretary,
Home (Miscellaneous) Department
Fort St. George, Madras

JUL 19

Sir,

I request you to be good enough to kindly arrange to supply us with all Government publications usually

placed on the Editors'
Table.

I need hardly
say that our journal
commands wide
circulation in this
& the adjoining districts.

Your publications
when supplied to us
will greatly help us
in placing before
the public the real



views of Government
and the various measures
adopted then & there.

I beg to remain,
Sir,
Your most obedient
Servant,
E. Deyanarayanan

| | Initials. | Date. |
|---|---|---|
| Received in Fair-copying Section. | | |
| Copied ... ... | | |
| Examined ... | Rai | 13.7.20 |
| Signed ... | | |
| Despatched ... | | 13.7 |

4

Home (Mis) Dept.

Read

C No 3482.

4

Endt 3482-1 / 13 7 20

Referred to the District magistrate of Tanjore for remarks.

2 The D.M. is requested to obtain and forward some speciment copies of the journal and furnish information as to its circulation.

SNP 12.7.20

12.7.20.

To

The D.M. Tanjore (9 endst) with C.F. in original to be retd with reply

R to issue on 13.8.20.

Shipworth
H. [illegible]
20/7/20

5/

C.F.—20.

(HOME MISCELLANEOUS) **DEPARTMENT.** Mis 3688

*Received* ................ 191 . *Registered* ....28/7.... 1920

26 JUL 1920

*Subject.*

Forwarding with 5 issues of the journal "Samarasa Bodhini" with information ~~as re~~ ~~to~~ its circulation.

| ENCLOSURES. |
| --- |
| No. one and 5 copies of journal |
| Spare copies |

R.C. **No.** 1595/M of 1920.

*Station* Tanjore, , *Dated the* 23rd July 1920. 191

From (Name) R.C. Dutt Esquire, B.A., I.C.S.,

(Designation) Collector of Tanjore.

To The Secretary to the Government of Madras,

HOME (Miscellaneous) Department.

OOTACAMUND.

Sir,

With reference to Government endorsement No.3482-1 dated 13th July 1920, I have the honour to forward herewith 5 issues of the journal 'Samarasa Bodhini' and to state that there are 500 subscribers at present and that the journal has circulation in almost all the Tamil districts and others parts of India, Penang, Singapore, -- Federated Malay States and Ceylon.

2.

6

2. The enclosure received with the Government endorsement is resubmitted.

I have the honour to be,

Sir,

Your most obedient servant,

U. R. MacEwen

For District Magistrate.

T.S.S./26-7-20.

Sri Ramajayam

Samarasa Bodhini Office First issue File copy

Tanjore 16-6-1920.

**Reg. No. M.**

# ஸமரஸ போதினி.

## "The Samarasabodhini"

ராஜீய விஷயங்களுடனும், கல்வி, சுகாதாரம், கூட்டு முயற்சி, வியாபாரம், கைத்தொழில் முதலிய விஷயங்களுடனும் பிரதி புதன் கிழமை தோறும் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை.

A Weekly devoted to the Political, Educational and Industrial Advancement of India.

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார் திண்ணியராகப் பெறின்."

புத்தகம் 1. | ரௌத்திரிஸு ஆனிமீ ௩௨ 16th June 1920. தஞ்சாவூர். | பிரதி 1.

திருத்தன்னை நீப்பினுந்தெய்வஞ் செறினு
முருத்தமனத்தோடு யர்வுள்ளினல்லா
லருத்தஞ்செறிக்கு மறிவிலார்பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லா மேல்.

(நாலடியார்.)

ஸமரஸ போதினி, தஞ்சாவூர்.

## நோட்டீஸ்.

**சந்தா விபரம்:—**

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ 5—0—0

பினங்கு, சிங்கப்பூர், முதலிய இடங்களுக்கு ரூ 7—0—0

For India, Burma and Ceylon, Rs. 5/a year.

For F. M. S., Natal, etc Rs. 7/a year.

**விளம்பர விகிதம்:—**

கலம் 1-க்கு மாதம் 1-க்கு ரூ 10—0—0

அங்குலம் 1-க்கு ரூ 1—0—0

For One month 4 insertions per month per column Rs. 10-0-0.

Casual Advertisements @ 1-0-0. per inch.

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பர ஒப்பந்தம் செய்து கொள்பவர்களுக்கு குறைந்த விகிதம் வாங்கப்படும்.

**விஷயதானம்:—** செய்பவர்கள் ஆங்காங்கு நடக்கும் விஷயங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுகிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்ப வேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோற்கும் சமாசாரங்கள் அனுப்புவோற்கும் தகுந்த ஊதியம் கொடுக்கப்படும். முழு விபரங்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

## இந்தியாவின் தேவைகள் யாவை?

எவ்விதம் ஆங்கிலேயர் தமது தாய் நாடாகிய ஆங்கில பூமியில் ஸர்வசுதந்திரத்துடனும் ராஜாங்க முறையில் ஸ்வயேச்சையுடனும் சுகமாய் வாழ்ந்து வருகிறார்களோ அவ்விதமே இந்தியரும் தமது தாய் நாடாகிய இந்தியாவில் பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்திற்குட்பட்டு ஸர்வ சுதந்திரத்துடன் ஸ்வராஜ்ய பதவியை அடைய முயல வேண்டும்.

இந்தியர்களால் யாதொரு நிபந்தனையன்னியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு ராஜ்ய நிர்வாகம் நடைபெறும் பாத்தியதையை நாம் பெறவேண்டும். இந் நிர்வாகம் ஸரிவர நிறைவேறும் பொருட்டு நமது மந்திரிகளை நாமே தெரிந்தெடுக்கவும்! மந்திராலோசனை ஸபைகளை ஏற்படுத்தவும் கலைக்கவும் நமக்கு அதிகாரம் வேண்டும். நமது [illegible]நாட்டிலேற்படும் குழப்பங்கள் சச்சரவுகளை [illegible]டுக்கவும் வெளி நாட்டாரால் நமக்கு யாதொரு விதமான ஹிம்ஸை ஏற்படாத வண்ணம் நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளவும், நம் நாட்டோர் யாவரும் ஆயுதங்களைக் கையாடும் ஸ்வதந்திரத்தையும், ராணுவப் படை, கப்பற்படை, ஆகாயப்படை முதலியவற்றில் பெரும்பாலும் இந்தியர்களையே அமர்த்திக்கொள்ளும் பாத்தியத்தையும், நாமடையவேண்டும்.

நமது ராஜ்ய பரிபாலன ஸபைகளில் ராஜ்ய நிர்வாகத்திற்கு வேண்டியவளவு நாமே நம்மால் கொடுபடவேண்டிய வரிகளை விதித்துக்கொள்ளவும், வசூலாகும் தொகையை விநியோகிக்கும் முறைகளை நிர்ணயிக்கவும், வருஷா வருஷம் வரவு செலவு திட்டங்களை ஒழுங்கான வழிகளை அனுஸரித்து ஏற்படுத்திக்கொள்ளவும் வேண்டும்.

நமது தேச முன்னேற்றத்திற்கேற்றவாறு நம் மாணாக்கர்களுக்கு கல்வி புகட்டும் வழிகளை நாமே தேடிக்கொள்ளவேண்டும். நம் நாட்டிலுள்ள அகிலப்பிரதேசங்களை சாகுபடிக்குக் கொண்டுவரும்படி நீர்ப்பாசனவஸதிகளை நாமே தேடிக்கொள்ளவும், நமது தேசத்தில் அகப்படும் தாது வர்க்கங்களை வெளி நாட்டார் கைப்பற்றி வேலை செய்து ஏராளமான லாபத்தையடையாது அவைகளைநாமே வேலை செய்தும், நமது நாட்டுச் செல்வம் அதிகரிக்குமாறு தேசவாணிஜ்யம் செழித்தோங்கும் முறைகளை அனுஸரிக்கவும், நமது நாட்டு நாணய செலாவணி விஷயங்களை நமது ஸௌகர்யத்திற்கேற்றவாறு நிஷ்கர்ஷித்துக்கொள்ளும் சுதந்தரத்தைக் கைப்பற்றவும் வேண்டும். நமது தாய் நாடானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலடங்கிய ஒரு அங்கமாயிருந்து தன தூஎல்லைக்குள் தானே ராஜ்யாதிகாரம் பெற்று அரசியல் புரிந்து, ஏகாதிபத்திய ஸபைகளுக்குத்தனது பிரதிநிதிகளைத்தானே தேர்ந்தெடுத்தனுப்பும் பாத்தியத்தையுமடையவேண்டும்.

இவ்வண்ணம் நமது தேவைகள் எல்லாம் நிறைவேறிவிடின், இந்தியர் தற்காலத்தில் பலவழிகளிலும் படும் துன்பங்கள் நீங்கி, மனச்சோர்வற்று ஏனைய நாட்டாரைப்போல் ஸர்வ சுதந்திரங்களுடனும் செல்வாக்குடனும் சுகமாய் வாழ இடமுண்டு. இவ் விஷயங்களை விஸ்தாரமாய்ப் பின்னர் கவனிப்போம்.

---

## தேவை.

சந்தாதாரர்களை சேர்க்கவும் விளம்பரங்களை சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
எல்லையம்மன் கோவில் தெரு,
தஞ்சாவூர்.

# நமது பிரமுகர்களின் அபிப்பிராயம்.

ஸர். பி. ஸ் சிவசுவாமி அய்யர் அவர்கள்

K. C. S. I.

C. I. E., பின்வருமாறு எழுதுகின்றார்:—

ஐயா,

தாங்கள் மே மீ 25 உ அனுப்பிய கடிதமும் தாங்கள் புதிதாய் நடத்தப்போகிற "ஸமரஸ போதினி" என்கிற விருத்தாந்த பத்திரிகையின் அறிக்கைப் பத்திரிகையும் வந்து சேர்ந்தன. இது விஷயமாக தாங்கள் என்னோடு பல தடவை கலந்து பேசியிருக்கிறீர்கள். பிரதி ஜில்லாவிலும் அந்தந்த தேச பாஷையில் நியூஸ் பேப்பர்கள் ஏற்படவேண்டியது அவசியம் யென்கிற என்னுடைய அபிப்பிராயத்தை பல தடவை வெளியிட்டிருக்கின்றேன். இப்பொழுது அனுஷ்டானத்திற்கு வரப்போகிற ராஜாங்க சீர் திருத்தங்களை உத்தேசித்து ஜனங்களுக்கு பொது விஷயங்களில் அக்கரை உண்டு பண்ணும்படி செய்வதற்கும் தகுந்த நியூஸ் பேப்பர்கள் வேண்டியிருக்கின்றன. நியூஸ் பேப்பர்களுக்கு, ஜனங்களுக்கு நன்மை உண்டு பண்ணுகிற சக்தியும் இருக்கிறது. எவ்விதமான பிரயோஜனத்தை ஒரு நியூஸ் பேப்பர் கொடுக்குமென்பது அதை நடத்தி வரும் ஒழுங்கைப் பொருத்ததாயிருக்கிறது. தங்கள் பத்திரிகையின் நோக்கங்கள் இன்னின்னவென்று குறிப்பிட்டிருக்கின்ற சங்கதிகள் யெல்லாம் சரியானவைகள்தான். நடத்துகிற மாதிரியில் முக்கியமாய் சில கருத்துகளைக் கொண்டாட வேண்டியது. அதாவது எந்த விஷயத்திலும் ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கு முன் வாஸ்தவம் இன்னதென்று ஜாக்கிரதையாய் தெரிந்து கொண்டு அது அபிப்பிராய பேதம் இருக்கக் கூடிய விஷயமாயிருந்தால் ஒவ்வொரு அபிப்பிராயத்திற்கும் ஆதாரமாக எடுக்கக் கூடிய அம்சங்களை நன்றாக கவனித்து பக்ஷபாத மில்லாமல் விளக்க வேண்டியது. நமக்கு விரோதமான அபிப்பிராயம் உள்ளவர்களிடத்தில் கூட த்வேஷமில்லாமல் அவர்களையும் அவர்களுடைய அபிப்பிராயங்களைப் பற்றியும் நியாயமாய் எழுத வேண்டியது. எந்த விஷயத்தையும் பூராவாய் பரிசீலனை செய்து பதார்த்தத்தை அறிந்து கொண்டு வெளிப்படுத்த வேண்டியது முக்கியமானது. பரிசீலனை செய்வதற்கு முன்னமேயே பக்ஷபாதத்தின் பேரில் மனதில் ஒரு ஆக்கிரஹத்தை வைத்துக் கொண்டு பரிசீலனை செய்தால் யதார்த்தம் அறிய முடியாது. இந்த பிரகாரம் நடத்தும் பக்ஷத்தில் தங்களுடைய பத்திரிகை "ஸமரஸ போதினி" யென்கிற பெயரை அனுஸரித்து வரும். தங்களால் கூடிய மட்டும் அப்படியே நடத்துவீர்களென்று நம்புகிறேன்.

ஜன்ம பூமியின் பத்திராதிபராகிய டாக்டர் பட்டாபி ஸீதா ராமய்யா அவர்கள்,

B. A., M. B. C. M.,

பின்வருமாறு ஆங்கிலத்தில் எழுதுகிறார்:—

ஸத்தியத்தைக் கடைப் பிடித்து நிற்பதே எக்காலத்திலும் தற்சமயம் மிகவும் அவசியமாயிருக்கிறது. இங்கிலாந்துக்கு நமது பிரதி நிதிகளாகச் சென்றிருந்தவர்கள் நமது தாய் நாட்டிற்காக அங்கு செய்த ஸேவைக்காக நாமெல்லோரும் நன்றி பாராட்டக் கடமை பட்டுளோம். ஆனால் அவர்கள் திரும்பி வரும்பொழுதே அங்கிருந்து ராஜீய ஸம்பந்தமான கக்ஷிப் பிரதி கக்ஷி நிலையின் தோஷங்களை மட்டில் நமது நாட்டிற்குக் கொண்டு வந்து நமது தேசிய விஷயங்களில் புக விட்டிருக்கிறார்கள். இது ஒருவாறு ஸகஜமே. ஏனெனில் அவர்கள் அங்கிருந்தபோது பார்லிமெண்டு சபை மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க நடை பெற்ற எலெக்ஷன்களில் ஓர் பிரமாதமான எலெக்ஷன் நடைபெற்றது. அச் சமயம் அங்கு நடந்த கக்ஷி அமர்க்களங்களையும் விவாதங்களையும் கண்ணோக்கி நமது தேச ராஜீய விஷயங்களிலும் அவைகளை அப்படியே அனுஷ்டிக்க ஆரம்பித்தார் போலும். இந்நாளில் நாம் இன்ன கக்ஷியைச் சேர்ந்தவர் சேராதவரென பெயரிட்டுக் கொள்ளத் துவக்கி விட்டோம். நமது கக்ஷியின் குற்றங் குறைகள் இன்னதென்று ஆராய்ந்து பார்த்து அங்கீகரிக்க மனமற்றவராயிருக்கிறோம். பிறர் அவைகளை எடுத்துக் காட்டினால் அதனால் நமக்கு வருத்த முண்டாகிறது. இது முற்றிலும் பிசகு. ஸத்தியமான கொள்கையை பரித்தியாகம் செய்து விட்டோம். சமயத்திற்குத் தக்கவாறு நடந்து கொள்ளும் பழக்கம் நமக்குள் குடி கொண்டு விட்டது. இதை விட பெருந் தீங்கை விளைவிக்கக் கூடியது வேறொன்று மில்லை. நானா வட்டத்தில் நமக்கு வரக்கூடிய நன்மைகளை கை நழுவ விட்டு உடனே கிடைக்கக் கூடியதை மட்டில் நாம் கவரக் கூடாது. நமது ராஜ்ய தந்திர நிபுணர்களைப் போலவே நமது தேசத்தில் வழங்கி வரும் பத்திரிகைகளும் கக்ஷிகளை நாடியே வேலை செய்ய ஆரம்பித்து விட்டன. நாம் இன்னது செய்யப் போகிறோம் என்று ஆராய்ந்து பார்க்கக் கூட அவகாச மில்லாதிருக்கும் இவ்வுலகத்தில் சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப் படும் அபிப்பிராயங்களையே நம்முடையதாக அங்கீகரிப்பதும் பத்திரிகை வாசிப்பவரின் அபிப்பிராயங்களை சீர் தூக்கிப் பாராமல் ஸ்வீகரிப்பதும் சுத்தமாய் பிசகென்றாலும் இந்நாளில் இத்தீங்கு அதிகரித்தே வருகிறது. இது தேச முன்னேற்றத்திற்கு மிகவும் விரோதமாயிருப்பதுடன் நமது தேசப் பத்திரிகைகளின் ஜவாப்தாரி நிலையை ஆயிரம் மடங்கு அதிகரிக்கின்றது. பொதுவாய் பத்திரிகை நடத்துவோரின் நோக்கங்கள் எப்படி யிருக்க வேண்டுமென்று எச்சந்தர்ப்பத்திலும் ஸத்தியத்தையே நாடி நிற்பதும் நம் அபிப்பிராயத்திற்கு விரோதமாயுள்ளவர்களை பக்ஷபாதமின்றி நியாயமான முறைகளில் சீர் தூக்கிப் பார்த்தலும் நம்மையும் நம் போல் அபிப்பிராய முள்ளவர்களையும் தாக்ஷிண்ணியமின்றி விசாரித்துப் பார்த்தலுமே யாகும்.

ராஜ்ஜியக் கிளர்ச்சியை சரியான வழியில் திருப்பி நமது தேச முன்னேற்றத்திற்கு இடையூறு வாராதபடி [illegible]ச் சமயம் தவறினால் எச்சமயமும் வாய்க்[illegible]ட சபை ஸ்தானங்களிற்குச் சரியான நூறு அபேக்ஷகர்களைத் தெரிந்தெடுக்குமாறு பாடுபடுவதை விட பொது ஜன க்ஷேமத்திற்கு விரோதமான ஒரு கொடும் செயலையாவது அல்லது கபடமான அலுவலையாவது வெளிப்படுத்த முயல்வதே பத்திரிகைகளின் சிலாக்கியமான நோக்கமாகும். மேற் சொல்லியவாறு ஸமரஸ போதினியின் நோக்கங்களும் ஸத்தியம், நியாயம், ஒழுக்கம் இவைகளையே துணையாய்க் கொண்டு நிற்குமெனக் கருதுகிறேன்.

கோச்சி சமஸ்தானம்,
திவான் ஸ்ரீமான்ராவ் பகதூர்., T. விஜயராகவாச்சாரியார் அவர்கள் M. A., F. M. U.,

"தமது நோக்கம் மிகவும் சிலாக்யமானது. சண்டை சச்சரவுகள் மிகுந்த ராஜீயக் கக்ஷிக்காரர்களுள் தற்காலம் ஸமரஸ பாவத்தை யூட்டுவதைக் காட்டிலும் மேலான காரியம் வேறொன்றில்லை"

ராஜப்பிரதிநிதி சட்டசபை மெம்பர்,
ஸ்ரீரங்கம் ஹானரபில் K. V. ரெங்கசாமி ஐயங்காரவர்கள்:—

"சமீபத்தில் நடை பெறப் போகும் எலெக்ஷன்களில் அபேக்ஷகர்களுக்குள்ளும் அவரது கக்ஷிகளுக்குள்ளும் அதிக மனக் கசப்பு ஏற்படுவதற் கிடமுண்டு. அவ்விதம் விரோத பாவத்திற் கிடங் கொடாது காக்கத் தங்கள் பத்திரிகை யீடுபடுமென நினைக்கிறேன்."

பம்பாய் இந்தியன் ஸோஷியல் ரிபார்மர் பத்திரிகையின் பத்திராதிபர் ஸ்ரீமான் K. நடராஜன் அவர்கள் B. A., F. B. U.,

"தமிழ் மக்களின் முன்னேற்ற[illegible] உத்தேசித்து அரசிறை நூல் தத்வங்களை [illegible]பத்திரிகை வாயிலாய்ப் போதிக்க தாம் முன் வந்திருப்பது மிகவும் மெச்சத் தக்கதே"

சென்னை ஸ்ரீமான் C. P. ராமஸ்வாமி ஐயரவர்கள் B. A., B. L., F. M. U., :—

"நமது தேசஸேவகர்களுள் ஸமரஸ பாவத்தைப் பரவச் செய்ய வேண்டுமென்ற தமது சிலாக்யமான உத்தேசம் தாம் பிரசுரிப்பதாய் முன் வந்திருக்கும் பத்திரிகையில் விருத்தியடையுமென நம்புகிறேன்"

ஸ்ரீமான் ராவ் பகதூர் T. ரங்காசாரியார் அவர்கள்:—

ஸமரஸத்தை நம்முள் உண்டு பண்ணுவதே தங்கள் பத்திரிகையின் முக்கிய நோக்கமென நினைக்கிறேன். அவ்வாறு முயல்வதே இக்காலத்திற்கு அனுகுணமாகும். சென்ற இரண்டு வருஷங்களில் ராஜீய விஷயத்திலுழைத்து வரும் நமது தலைவருள் ஒருவருக்கொருவர் நம்பிக்கைக் குறைவும் விரோத பாவமும் வெளிப் படையாய் அதிகப்பட்டு வருவது விசனிக்கத் தக்கதே. இது நமது தேசத்தில் வேறொன்றும் பக்ஷத்தில் தேச முன்னேற்றத்திற்கு ஒரும் பெரும் விபத்தாய் முடியுமென எத்தேசாபிமானியும் ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது. சென்னையில் பிரசுரிக்கப் படும் தினசரிப் பத்திரிகைகள் இந்தியர்களின் அபிவிருத்தியை முன்னிட்டு வேலை செய்யும் நோக்கத்துடனிருந்த போதிலும் இவ்வித உணர்ச்சியை அதிகப் படுத்தி வருகின்றன வென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. தங்கள் "ஸமரஸ போதினி" பத்திரிகையாவது பொது ஜனங்களி[illegible] அபிப்பிராயத்தை சரியான வழியில் உருவாக்[illegible] விடுமென்று நினைக்கிறேன்.

கல்கத்தா வாசியான ஸ்ரீமான் டாக்டர் ஸர் தேவப் பிரசாதிகள் ஸர்வாதிகாரி அவர்கள். M. A., L. L. D, F. C. U., K. C. I. E.:—

"ஆங்கிலம் பயிலாத நம்மவர்க் குபயோகப்படும் விதம் விஷயங்களைத் தெளிவாய் கற்பிக்கும் நோக்கத்துடன் தமிழில் ஒரு பத்திரிகையை தாம் இயற்றப் போவதாய் அறிய நான் சந்தோஷிக்கிறேன். தமது பத்திரிகை நமது தேசத்தின் உமது பார்சத்தில் உள்ள தெரிந்தெடுப் போரின் தொகுதிகளைச் சரியான வழியில் அறிவூட்டி, கூடிய மட்டில் புதிய சீர் திருத்த ஏற்பாடுகளைச் சித்தியடையச் செய்யுமென நம்புகிறேன்?

சேலம், ஸ்ரீமான் தேசபக்த சிரோமணி C. விஜயராகவாச்சாரியார் அவர்கள்:—

நமது தேசவாசிகளுள் தற்போது ராஜீய விஷயங்களிலுள்ள பேதங்களை ஒருவாறு ஸமரஸப் படுத்தும் மேலான உத்தேசத்துடன் தாம் ஒரு வாராந்திரப் பத்திரிகையை பிரசுரிக்க முன் வந்திருப்பது மெச்சத் தக்கதே: நமது அபிப்பிராயத்திற்கு மாறாகவும் விரோதமாயும் அபிப்பிராயப் படுவோருடனும் நாம் நேர்மைப் புத்தியுடனும் பெருந் தன்மை யுடனும் பழக்க வேண்டுமென்று

(11-ம் பக்கம் பார்க்க)



# திலகர் பெருமான்.

## I. முன்னுரை.

வீரமிக்க மராட்டியர் ஆதர்
மேவிப் பாரத தேவி திருநுதல்
ஆரவைத்த திலகமெனத் திகழ்
ஐயனல் லிசைப் பால கங்காதரன்
[illegible]ர்க்கு நினைக்கவுந் தீயென
[illegible]வெங்கள் திலக முனிவர் கோன்
சீரடிக் கமலத்தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெருகெனச் சிந்தித்தே.

சி. சுப்ரமணிய பாரதி.

"பிறப்புரிமை சுய ஆட்சி, பெறவேண்டும்"
[எனுமரிய
அறமொழியை உரை செய்த அருள்முனிவ
[ரெவரேயோ?
உலகமெலாங் கலக்குறினும் உறுதி நிலை
[கலங்காத
திலகமுனி யென்றன்னைத் தேவர்களுஞ்
[செப்புவரோ
சிந்தியா உளம் உவதோ செப்பாத நாவுன்தோ
இந்தியா முழுவதுமே இயங்குவதும்
[வடிவன்றே.

திரு. வி. க.

நான்முகன் படைத்த இவ்வுலகத்தின் கண் தேயங்களெல்லாவற்றினும் மிகத் தூய்மை பொருந்தியதாய்க் கற்றோர்க் குறைவிடமாய்ச் சான்றோர்க கணிகலமாய்ச் செல்வத்தின் களஞ்சியமாய் உண்மையின் பிறப்பிடமாய் ஆண்மைக் குடிநாடாய் அழிவைத்தரும் சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை நாடி ஆன்ம சக்தியை யெழுப்பும் வன்மையுடைய எண்ணிறந்த துறவிகளும் முனிவர்களும் வாசஞ்செய்யா நின்ற தவவனமாய்ப் பசுவும் புலியும் பகைமை பாராட்டாது ஒரு துறையில் நீரருந்தும் சாந்தவடிவாய் விளங்கியது நமது பாரத பூமியென்பதை யறியாதா ரெவருமிலர். அன்னிய நாட்டோர் மிருகத் தன்மை மேலிட்டுக்க[illegible]டு மனிதர் போலுடுக்க ஆடையின்றி உண்ண உணவின்றி ஒருவரையொருவர் புசித்து ஓர் மரத்தினின்றும் மற்றொரு மரத்திற்கு மந்திபோற் றாவிக்கொண்டிருந்த நாளில் இந்து தேயம் நா[illegible]ம் முதிர்ந்து அரசியற்றுறை சிறந்து ஞானம் பொலிந்து நீர்வளம் நிலவளம் செழிந்து வியாபாரம் மிகுந்து உலகுக்கோர் திலகம் போற்றிகழ்ந்திருந்தது.

இத் தன்மைய சிறப்பு வாய்ந்திருந்த பாரத நாடு, அகத்தியர், புலத்தியர், வசிட்டர், காசியபர், கௌசிகர் முதலிய பெரியோர்களை யீன்ற பாரத நாடு, தசரதன், ராமன், அரிச்சந்திரன் போன்றவுண்மையாளரைப் படைத்த பாரத நாடு, வான்மீகி, காளிதாசர், வியாசர், கம்பர், ஔவை, புகழேந்தி, ஒட்டக்கூத்தரொத்த புலவர்களைப் போற்றும் பாரத நாடு, சந்திர குப்தன், அசோகன், சமுத்ர குப்தன், ராஜராஜன், அக்பர், சிவாஜி யேனையோரரசாண்ட பாரதநாடு, சங்கரர், ராமானுஜர், மாதவர், சைதன்னியர், மஹாவீரர், புத்தர் ஆதிய மதத் தலைவர் வசித்த பாரத நாடு, இவ்வமயம் அயல்நாட்டிலுள்ளோர் தன்னைக்கண்டு நகைக்கவும் தனது மக்கட்களை அடிமைபோல் நடத்தவும் உடல் மெலிந்து உள்ளமுடைந்து மானங் குறைந்து நிதியிழந்து சுதந்தர மழிந்து வறுமைக்குடிநாடாய்த் தவிக்கின்றது. அறிவும் நாகரீகமும் அளவு மிஞ்சிப் பொலியுமிந்நாளில், சுய நிர்ணயத்தின் தாய்நாடாய் விளங்கும் இங்கிலாந்தின் கண்ணியம் பொருந்திய ஆட்சியின் கீழ் இந்தியாவின் கதி இவ்வாறிருக்குமாயின், நேயர்காள்! யான் என் சொல்வது? முற்பிறவியின் வினைப் பயனென்றே கூறுவோம்.

இந்திய நாடு இத்தாழ்ந்த நிலைமையடைந்தும் உலகத்தோர் வியக்கத்தக்க அருப்புதல் வரைப்பெறும் பாக்கியமடைந்திருக்கின்றது. லோகமான்யரென்று இந்தியரால் போற்றப்படும் பாலகங்காதர திலகர் பெருமானின் களங்கமற்ற தேசாபிமானமும் கபடற்ற மனமும் உறுதி நிலையும் தளரா நெஞ்சமும் உண்மை நோக்கமும் தயாளகுணமும் தூயவாழ்வும் ஆண்மைத் தன்மையுமுடையோர் இப்பாரின்கண் யாவருளர்? காந்தியடிகளின் சாந்த வடிவைத் தாங்கியோரிவ் வுலகில் எத்தனைபேரிருக்கின்றனர் கல்லையுங் கரைக்கும் பேச்சு வன்மை பொருந்திய விபினசந்திரபாலரொத்தவர் அந்நிய நாடுகளில் எவரேனுமுண்டோ? ரவிந்திர நாதரின் கவித்திறமையும், ஜகதீச சந்திர போஸின் இயற்கை நூலாராய்ச்சியுங் கண்டு வியக்காதவர் யாவரிருக்கின்றனர்? அரவிந்தரின் தவநெறியும் லஜபதியின் உள்ளன்பும் மாதவராயரின் அரசியல் ஞானமும் சித்தரஞ்சன் தாஸரின் சட்டப்பயிற்சியும் படைத்துளோர் இப்புவியிலெண்ணிறந்தனரோ? இத்தகைய மக்கட்களைப் பெறும் பேறு வாய்ந்த நமது தேயம் தைரியங்குன்ற அவசியமேயில்லை. இங்கிலாந்தில் வசிக்கும் ஆங்கிலரின் நியாய முறையினாலும் இந்திய தேச பக்தர்களின் விடா முயற்சியினாலும் விரைவில் நமது நாடு ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் முழுச் சுதந்தரத்தையுமடைந்து பழைய வுன்னதப் பதவியைத் திரும்பப் பெறுமென்பதிற்குச் சற்றேனுமையமில்லை.

இப்பொழுது உயிரோடு வாழு மிந்தியர்களில் தலைமை வகிப்பவர் பாலகங்காதர திலகர். இவரைக் கற்றோர்கள் லோகமான்யரென வழங்குகின்றனர். பாமரர்கள் தெய்வமாகத் துதிக்கின்றனர். சான்றோர்கள் காமகளுருவெனப்புகழ்கின்றனர். அரசியல் வாதிகள் திலக மஹாராஜனென் றேத்துகின்றனர். வேதாந்திகளும் முனிவர்களும் கர்மயோகியென்றும், லக மகரிஷியென்றும் போற்றுகின்றனர். அதிகார வர்க்கத்தார் திலகர் பெருமான் உருதியையும் அவரிடத்து இந்தியருக்குள்ள மதிப்பையுங் கண்டு நடுங்குகின்றனர். நியாய நெறி தவறாத ஆங்கிலர்கள் திலகர் பெருமானைத் தேசபக்த சிரோமணி யெனவும் சுதந்தரக் கிளர்ச்சிக் காதிமூலமெனவுங்கருதுகிறார்கள். இந்திய தேச பக்தர்கள் திலகர் பெருமானைத் தெய்வமாகவுங் குருவாகவும் வழிபட்டு வருகிறார்கள் திலகர் பெருமானின் திருவுருவச் சிலைகளையும் திருவுருவப்படங்களையும் வீடுகளில் வைத்துப்பூசை செய்கிறார்கள். திலகர் பெருமான் திருவாக்குகளைப் பாராயணஞ் செய்கிறார்கள்.

மற்றத் தலைவர்களைக் காட்டிலும் திலகர் பெருமானிடத்தில் இந்தியருக்கு விசேட மதிப்பும் அன்பும் வணக்கமும் உண்டாகிய காரணம் யாது? எனச் சிலர் வினவலாம். இதற்கு விடையாகத் திலகர் பிரானின் அளவிறந்த தேசபக்தியும் நமது நாட்டினர் மாட்டு அவருக்குள்ள இயற்கையன்பும் தயாளமும், தேசப்பணியில் எவ்வகைத் துன்பம் நேரிடினும் அதைப் பொருட்படுத்தாது கருமத்திலேயே கண்ணாயிருக்கும் பெருந் தன்மையும் காரணமாகுமெனக் கூறுவது மிகையாகாது. பாரத தேவியை பரிதாப நிலையினின்றும் விடுவிக்கத் தம்முடல், பொருள், ஆவி மூன்றையும் தேச நன்மைக்கென வர்ப்பணஞ் செய்து ஒரு முறைக்கு மும்முறை சிறை புகுந்த இந்திய வீரன், திலக மஹாராஜன், அகிலமெலாம் போற்றும் கீதாரகசிய மென்னும் அரிய நூலின் ஆசிரியன், இந்திய நாட்டின் முடிசூடாமன்னனாய் விளங்கிவருகிறார். இத்தகைய பெருமை வாய்ந்த பெருமானின் சரித்திரத்தை விவரமாயறியவேண்டுவது ஒவ்வொரு இந்தியரின் கடமையாகும்.

## II. திலகரின் இளமை.

செங்கதிர்ச் செல்வனருள் செம்மன் முறை
[வழுவாது
தீமையைத் தையு மோம்பியே
செங்கோனடாத்தியிசை திசைதிசை பரம்பிடச்
செய்து தெவ் வினையடக்குந்
திங்கள் மரபினில் வரும் பரதனு மத்தினிற்
[செறியுமிவ் வண்டத்தினிற்
சிரனுயாரியர் சார நெறி மேர்ந்து பிறதேயத்
[தின் பொருளோவியே
பொங்கு சீர் நம் பொருள் பொலிந்து மல்கிடு
[மாறு புந்தி புகலுங் குரவனுய்ப்
புன்மை பல வந்தாரினு மஞ்சாத நெஞ்சனாய்ப்
புரிகொடுஞ் சிறையிருந்தும்,
சிங்கலற நம் பொருள்கடேசமெங்குஞ்செரிவு
செய்க வந்தேமாதரம்,
செப்பிவாழ்த்திச்சிறைதவிர்ந்தடில்லாக்கெனுஞ்
சீரியோன் வாழ்க மன்னே.

சி. சுப்பிரமணிய பாரதி

1856-ம் வருடம் ஜூலைமாதம் இருபத்து மூன்றாம் நாள் (நளஆடி) பூனா நகரத்துக் கருகாமையிலுள்ள ரத்னகிரியென்னுமிடத்தில், அந்தணர் குலத்தில் சித்பாவன் வம்சத்தில் கங்காதர ராமசந்திர திலகரின் அருந்தவப் புதல்வராய் பாலகங்காதர திலகர் பெருமான் அவதரித்தார். கங்காதர ராமசந்திர திலகர் வெகு நாள் ரத்னகிரியில் போதகாசிரியராயிருந்துப் பின்னாளில் தானுவிலும் பூனாவிலும் வித்தையிலாகாவில் மேற்பார்க்கும் அதிகாரியாய்க் காலங்கழித்தார். போதனை சக்தி இவரிடத்து மிகவு மதிகம். இவர் உபாத்தியாயராயிருந்த காலத்து இவரது அறிவின் நுட்பமும் யாவரையும் நேசிக்குந் தன்மையும் நகரத்தோரை மகிழச் செய்தன. மாணவர்களெல்லோரும் "இவரது குணமே குணம்,

இவரது புத்தியே புத்தி” என்று கொண்டாடும்படி வெகு சிறப்பாய்த் தன் வேலையை நடத்திவந்தனர். இஃதன்றியும் திரிகணிதம், இலக்கணம் என்ற இரு விஷயங்களைக் குறித்து மிகத் தெளிவான நடையில் இவர் இரண்டு புத்தகங்கள் பிரசுரஞ் செய்திருக்கின்றனர். அவற்றைப் படிக்குமளவில் இவரது கல்வி நன்கு புலனுகும்.

ஒளியுள்ள பொன்னும் வெண்மதியும் கருநாகமும் பாக்கியத்திற் றுலங்கவும், குற்றமற்ற புத்தியும் ஆதித் தன் குமாரனும் முக்தியைத் தரும் பக்திவீடாகிய வியத்தலடங்கவும் அழற்சேய் நான்காமிடத்திற் பொருந்தவும் ஞானகாரகனுய் விளங்கும் கேது தைரியக் கட்டத்திலமரவும் முதல் வீட்டில் ரவியும் புகரும் செழிக்கவும் அடியார் போற்றும் கடக விலக்கினந்தனில் திலகர் பிரான் இப்புவியிலுதயமாயினர். தனயனுதித்ததைக் கேட்ட தந்தை மஞ்சநீராடி வேத மோது வோர்க்கு வேண்டிய பொருளுதவி செய்துப் பதினோராம் நாள் புண்ணியாவாசகம் போன்ற சடங்குகளைக் குறைவற நடாத்தினர். திலகரின் அன்னை தன் மகனுக்குக் தக்க காலங்களில் எண்ணெய் புகட்டி நீராட்டி மைதீட்டிச் சீராட்டிப் பாராட்டி வருவாளாயினுள். குழந்தையும் நாளுக்கு நாள் விருததியடைந்துச் சில மாதங்களில் ஒவ்வொரு வார்த்தைபாய்த் தட்டுத்தடுமாறிச் சொல்ல வாரம்பித்தது. மகவின் மழலைச் சொற்கள் பெற்றோரின் செவியில் அமுதம் போற்சுரந்தன. இது காரணம் பற்றியே ஆன்றோர்கள்:—

“மகப்பெருமானிடர்கள் வானவர் தம்மூர்க்குப்
புகப்பெறூர் மானிடராய்ப் போந்து”
“கல்லா மழலைக் களியூரல்கலந்து கொஞ்சுஞ்
சொல்லாலுருக்கியழு தோடித்தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சிமைந்த
ரில்லாதவர்க்குப் பெருவாழ்வினினிமை
[யென்னும்” எனத்
திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

இவ்விதம் திலகர் பெருமான் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகையில் இவரருமைத்தாய் மண்ணுலகைவிட்டு விண்ணுலமேகினர். தாயிழந்த விசனம் தன் பிள்ளைக்கு மேலிடாமல் கங்காதர ராமசந்திர திலகர் முன்னைவிடப்பதின் மடங்கன்புடன் திலகரைப் பரிபாலித்து வருவாராயினூர்.

“விளையும் பயிர் முளையிலே தெரியும்” என்றவாறு இளமையிலேயே பெரியோர்களுமடையாத அறிவு நுட்பமிகுந்திருந்த பாலகங்காதர திலகர்வேதங்களெவற்றினும் மிகத் தொன்மையானது ருக் வேதமென்றும இல்லறத்தோர் துறவறத்தோரிருவரும் வாசித் துணரவேண்டியது, கண்ணபிரான் அர்ச்சுனனுக் கூட்டிய கீதையென்னும் ஐயந்திரிபறத் தெளிந்துகொண்டார். சான்றோர் யாவரும் இவரது கூரிய புத்தியையும் தெய்வத் தன்மையையும் கண்டு கர்யக்கலாயினர். கங்காதர ராமசந்திர திலகர் தன்னிளங்குமாரனுக்கு வேதவிதிப்படி ஏழாம்பிராயத்தில் உபநயனஞ் செய்வித்துப் பின் கல்வி கற்பிக்க வேண்டுமெனும் வாவினுல் திலகரைப் பள்ளியிற்சேர்த்தனர். வாலிப முதல் திலகர் பிரானுக்கு வடமொழியிலும் கணக்கிலும் அதிகப்பிரியமுண்டு. திலகர் பெருமான் வருடா வருடம் ஒவ்வொரு பரீட்சையிலுந் தேறிப் பதினையாண்டு நிரப்புமுன் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப் பணங்கட்டிவிட்டார்.

ஆர். கணேசய்யர்.

(இன்னும் வரும்)

## சுதேசிய விருதம்.

நமது புண்ணிய பூமி ஆகிய இந்தியா தேசம் நீர்வளம் நிலவளம் செல்வம், கல்வி. நாகரீகம் முதலியவைகளில் பெயர்பெற்றதென்பது யாவரும் அறிந்த விஷயமே. முற்காலத்தில் நம் தேசத்தில் கைத்தொழில்கள் மிகவும் உன்னத ஸ்திதியில் இருந்தன. கைத்தொழில்களுக்குத் தேவையான விளைவு பொருள்கள் ஏராளமாய் கிடைத்தன. பருத்தி, பட்டு, அவுரி, சணல் முதலிய தளவாடங்களைக் கொண்டு அநேக தொழிலாளிகள் சுகமாய் ஜீவித்து வந்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் பல கைத்தொழில்கள் கிரமமாய் நடைபெற்று வந்தன. அத்தொழில்களை அரசர்களும் தனிகர்களும் அன்போடு ஆதரித்தார்கள். ஆகவே அவர்களின் ஆதரணையின் கீழ் வியாபாரம் செழித்தோங்கிற்று. அன்னிய நாடுகளுக்கு நம் தொழிலாளர்களின் சரக்குகள் ஏராளமாய் விற்பனைக்கு கொண்டு போகப்பட்டன. வெகு நேர்த்தியான ரவை செல்லாக்களென்ன, பட்டு வஸ்திரங்களென்ன, மற்றும் பல விதமான ஆடைகளை அன்னிய தேசங்களுக்கு விற்று ஏராளமான தங்கம், வெள்ளி, முதலியவைகளை சம்பாதித்துக் கொண்டு வருவது வழக்கம். வியாபாரிகள் தங்கள் சரக்குகளை நமது தேசத்தில் நம் சகோதரர்களால் செய்யப்பட்ட கப்பல்களில் ஏற்றிக் கொண்டு வெகு தூரம் திரை கடலோடித் திரவியம் தேடித் திருப்பிவருவது வழக்கம். அன்னிய தேசத்தினர்கள் நம் நாட்டின் செல்வ நிலைமையை அறிந்து ஆச்சரியப்பட்டார்கள். அன்னிய தேசத்தரசர்களும் இந்தியா மீது படை எடுத்து ஏராளமான பணத்தை கொள்ளை அடித்துக் கொண்டு போனுர்கள். 15ம் நூற்றுண்டில் ஐரோப்பியர்கள் வியாபார நிமித்தம் இந்தியாவிற்கு வந்தார்கள். வந்தவர்கள் வியாபாரத்தோடு நிற்காமல் பல காரணங்களை முன்னிட்டு ராஜ்யாதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். என்ருலும் லாபத்திலேயே திருஷ்டியுள்ள வியாபார முறையை அவர்கள் கைவிடாது நின்றமையால் தங்களுடைய சுய நலத்தை உத்தேசித்து நம் தேசக் கைத்தொழில்கள் நாளடைவில் நசித்துப் போகும் வண்ணம் முயற்சி செய்தார்கள். இதன் பயனுக நம் தேசத்தில் விளையும் பருத்தி முழுவதும் பிர தேசத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து வரும் துணிகளை நமது ஜனங்கள் வாங்கி உடுத்துப்படி நேர்ந்தது. உள் நாட்டில் கைத்தொழில்கள் தலை எடுக்க இடமில்லாமல் போயிற்று.

சீர்மையிலிருந்து வரும் துணிகளோடு போட்டி போட முடியாமல் கிராமங்களில் கைத்தரியால் நெய்யப்பட்ட துணிகள் மறைந்து போயின, வயிறு நிரம்ப சாப்பிட்டு சுகமாய் காலம் கழித்து வந்த கைத்தொழிலாளிகள் இன்னது செய்வதென்று தெரியாமல் வியவசாயத் தொழிலைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்தியாவில் சுமார் நூற்றிற்கு 80 பேர் பூமியை நம்பி ஜீவனம் செய்கிருர்கள். கிருஷி செய்து [illegible]பட்ட போதிலும் அவர்களுக்குத் தேவையான வரும்படி கிடைப்பதில்லை. நிலத்தீர்வையும் அதிகமாக விதித்திருக்கிருர்கள். இவ்விஷயத்தைப் பற்றித் தனியாக பிறகு ஆருய்ச்சி செய்வோம்.

எல்லாவிதமான கைத்தொழில்களும் நமது கவர்ன்மெண்டாரின் ஊக்கக் குறைவால் மறைந்து போயின. ஆங்காங்கு தத்தளித்துக் கொண்டிருந்த சில கைத்தொழில்களை ஆதரிப்பவர் ஒருவருமில்லாமல் அவைகளும் இருந்த விடம் தெரியாமல் போயவிட்டன. பிரஜைகளின்யோகக்ஷேமத்தில் யாதொருவிதமான கவலை கொள்ளாமல் தங்களுடைய லாபத்தையே பெரிதாகக் கருதி ராஜாங்கத்தார் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். அதனுல் தேசத்திற்கு அநேக விபரீதங்கள் நேர்ந்தன.

தேசத்தில் வறுமை, பஞ்சம், பிணி மற்றும் அநேக விதமான துன்பங்கள் ஜனங்களை பீடிக்கலாயின. தொழிலாளிகளுக்கு கை முதல் கொடுத்துத்தொழிலை நடத்தும்படி செய்பவர் ஒருவரும் முன் வரவில்லை. அன்னிய நாட்டுச் சரக்குகள் நமது நாட்டிற்குள் ஏராளமாய் வந்து குவியாமல் தடுக்க வரியும் விதிக்கப்படவில்லை. இஷ்டப்பட்டவர்கள் யாதொரு தங்குதடையன்னியில் இந்தியாவில் தங்களுடைய சரக்குகளை கொண்டு வந்து விற்கலாமென்னுங் கொள்கையை நமது ராஜாங்கத்தார் கைக்கொண்டார்கள். மூலை முடுக்குகளிலிருந்த கைத்தொழில்களும் போய்விட்டன. எங்கு பார்த்தாலும் ஏராளமான மெஷின்களும் தொழிற் சாலைகளும் உண்டாய் வி[illegible]ன, பம்பாய், கல்கத்தா, ஆமதாபாத் [illegible]விய விடங்களில் நம்மவர்கள் தொழிற்சாலைகளை ஏற்படுத்தினுர்கள். அத்தொழிற் சாலைகளில் துணிகளை நெய்ய ஆரம்பித்தார்கள். அப்படி செய்தும் மான்சஸ்டர் லாங்கஷயர் முதலிய விடங்களிலிருந்து மூட்டை மூட்டையாக வந்த சரக்குகளோடு போட்டி போட முடியவில்லை. இவ்விதம் செய்து வந்த வியாபாரிகளையும் ராஜாங்கத்தார் கை தூக்கி விடவில்லை. அதற்குக் காரணம் தங்கள் சுயநலமேதான்.

மேலே கண்ட குறைகளை நிவர்த்திக்கும் பொருட்டும், கைத்தொழில்களை விருத்தி செய்யும் பொருட்டும் தேச முன்னேற்றத்தில் கவலை கொண்ட பல பெரியோர் பலமான கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். அப்படிச் செய்தும் யாதொரு பயனும் ஏற்படவில்லை. ஆங்கிலேய வியாபாரிகள் ஏராளமான மூலதனத்தோடு இந்தியாவிற்கு வந்து பலவிதமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தி பல வழிகளில் பொருள் சமபாதிக்க ஆரம்பித்தார்கள். அச்சரக்குகளை இந்தியர்கள் வாங்கி உபயோகிக்க ஆரம்பித்தார்கள். சீர்மை, ஆஸ்திரியா, ஜெர்மனி, அமெரிக்கா டென்மார்க்கு, ஸ்வீடன், பிரான்ஸ் முதலிய தேசங்களிலிருந்து வந்த துணிகள், காகிதம், கிளாஸ் சாமான்கள், சோப், பிஸ்கட், தீப்பெட்[illegible], வாசனை சாமான்கள், பீங்கான் பண்ட[illegible] முதலிய சாமான்களை ஜனங்கள் விசேஷமாக வாங்கி உபயோகப்படுத்தி வந்தார்கள். ஆகவே, தேசத்திலிருந்து அநேக கோடி ரூபாய் வருஷந்தோறும் நம் கைவிட்டு போய்க் கொண்டே வருகிறது. இதனுல் நாளுக்குநாள் நம் தரித்திர தசையில் மூழ்கித்தவித்துக் கொண்டிருக்கிறோம். இதை தடுப்பதற்கு வழிதேடிக் கொண்டிருந்த சமயத்தில் நமது தேசத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டன.

இந்தியாவிற்கு ராஜப் பிரதிநிதியாக வந்த கர்சன் பிரபு அவர்களின் நாளில் வங்காளம் இரண்டாக பிளக்கப்பட்டது. வங்காளத்தில் ஹிந்துக்களும்மகம்மதியர்களும் ஒற்றுமையோடு வாழ்ந்துவந்தார்கள். ருஷியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் ஏற்பட்ட மகா யுத்தத்தின் பயனுக ஆசியாவில் ஒரு வித உணர்ச்சி ஏற்பட்டது. இந்தியர்கள் ஜப்பானியர்களின் வெற்றியை புகழ ஆரம்பித்தார்கள். ஜப்பானியர்களைப் போல நாமும் ஏன் முன்னேற்றம் அடையக்கூடாது என்று யோசிக்க ஆரம்பித்தார்கள். பங்காளத்தலைவர்கள் சுறுசுறுப்போடு தேசத்தின் குறைகளையும் ஜனங்களின் கஷ்டங்களையும் தெளிவாய் எடுத்துரைக்கலாயினர். இக் கிளர்ச்சியை தடுக்காமல் சும்மா இருந்தால் ராஜாங்கத்தாருக்கு மிக கெடுதி நேரிடுமென்று நினைத்து கரசன் பிரபு பங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். அதற்கு ஜனங்க[illegible] சம்மதப்படவில்லை. ஏனெனில் அவர்களின் அனுமதி யன்னியில் செய்யப்பட்ட காரியமானதால் தான். உடனே பலத்த கிளர்ச்சி வங்காளத்தில் ஏற்பட்டது. இக்கிளர்ச்சியின் வலுவை குறைக்க மகமதியர்க[illegible] பல ஆசைவார்த்தைகளைக்கொண்டு கர்சன் பிரபு தன் வசமாக்கிக்கொண்டார். இதை அறிந்த பங்காளிகள் கூட்டம் கூடி தங்கள் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக தங்கள் உடல், பொருள், ஆவி இம் மூன்றையும் தத்தம் செய்வதாக சபதம் கூறினுர்கள். நமது தாய் நாட்டின் பூர்வ நிலைமை எவ்வாறு இருந்ததென்பதை ஆருய்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். அப்பொழுது தான் “சுதேசியம்” என்னும் ஊக்கம் எங்கும் பரவலாயிற்று. எங்கு பார்த்த போதிலும் “வந்தேமாதரம்” என்னும் திருமந்திரம் உச்சரிக்கலாயிற்று. நமது நாட்டில் விளையும் பொருள்களைக் கொண்டு நமக்கு தேவையான சாமான்களை நாமே நம் தேசத்திலேயே தயாரிக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். நம் தேசத்தில் நெய்யப்பட்ட துணிகளைத்தான் உபயோகிக்க வேண்டுமென்று பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். அனுவசியமான அன்னிய நாட்டுச் சாமான்களை உபயோகப்படுத்தக்கூடாதென்றும் சொன்னுர்கள். சிறிய சிறிய பண்டகசாலைகளும், சோப் செய்யும் சாலைகள், காகிதம் செய்யும் சாலைகள், முதலிய கைத்தொழிற் சாலைகளும் ஏற்பட்டன.

இந்தியா முழுவதும் இவ்வுணர்ச்சி பரவிற்று. நாசூக்கான துணிகளை வாங்கி உபயோகித்தவர்களெல்லாம் சுதேசி வஸ்திரங்களை தரிக்க ஆரம்பித்தார்கள். அகமதாபாத், பம்பாய், ராஜபுதனம், பங்களூர், கோயம்புத்தூர், முதலியவிடங்களில்ஏராளமான துணிகளையும் தோத்திகளையும், தயார்செய்து விற்க ஆரம்பித்தார்கள். இம்மாதிரி செய்தால் அன்னிய நாட்டு அதாவது இங்கிலீஷ் மில்லுக்களில் நெய்யப்பட்ட துணிகளின்வரத்து குறையலாயிற்று. அவைகளைமுற்றிலும் விலக்க வேண்டுமென்றும் சிலர் அபிப்பிராயப் பட்டார்கள். இது விஷயமாக காங்கிரஸ் மகாசபையில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அதாவது தேசாபிமானமுள்ள ஒவ்வொரு இந்தியனும் தன்னுடைய வாழ்நாளில் அன்னிய தேசச் சரக்குகளை உபயோகிக்காமல் எவ்வளவு மட்டில் காலம் கள்ளமுடியுமோ அவ்வளவு மட்டில் சுதேசிய விருதத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்றும் செளகரியகுறைவுஏற்பட்ட போதிலும் தம்தாய் நாட்டில் செய்யப்பட்ட சாமான்களையே உபயோகப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்,

இந்த தீர்மானத்தின்படி தேச மகாஜனங்களெல்லாம் நடக்க ஆரம்பித்தார்கள். இங்கிலாந்திலிருந்து புகார் உண்டாயிற்று. மான்சஸ்டர். லாங்கஷயர் முதலாளிகள் பார்லிமெண்டு மெம்பர்களிடம் முறையிட ஆரம்பித்தார்கள். அதிகார வர்கத்தினருய் சுதேசிக் கிளர்ச்சியில்சம்பந்தப்பட்டவர்களிடம் தங்களுடைய அபிமானக் குறைவை வெளியிட்டார்கள். இதை அறிந்த இந்தியர்கள் உத்ஸாகத்துடனும் ஊக்கத்துடனும் சுதேசிய விருதத்தை அனுஷ்டிக்க தலைப்பட்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் முன் மாதிரி கைத்தரிகளை ஏற்படுத்த வேண்டுமென்று முயன்ருர்கள். இந்த ஏற்பாடு மிகவும் மேன்மையானதென்று மகாத்மா காந்தியவர்களும் வற்புறுத்தி இருக்கிருர்.

நமது தாய் நாட்டிலுள்ள 31 கோடி ஜனங்களும் இவ்விரதத்தை தவருமல் அனுஷ்டிப்பாராகில் நமது எழ்மைத் தனம் குறைவதோடு இப்பொழுது வயிறு நிரம்ப சாப்பிடப்போதிய ஆகாரமில்லாமல் அவஸ்தைப் படுகிறவர்களும் தொழிலில்லாமல் கஷ்டப்படுகிறவர்களும் சுயமாய் கவலையற்று ஜீவித்திருப்பார்கள் என்பது திண்ணம். இதோடு நாளாக நாளாக நமது கைத்தொழில்கள் விருத்தியடையும். நமது கைத்தொழில்கள் விருத்தி அடைய நமது தேசத்திலுண்டாகும் மூலப்பொருள்கள் நமது தேசத்திலேயே உபயோகப்படுத்தப்படும். நமது தேசத்திலிருந்து வியாபாரமூலமாய் வெளியே போகும் கோடிக்கணக்கான ரூபாய்கள் நம் தேசத்திலேயே தங்கிவிடும் ஆகையால் இவ்விரதத்தை ஒவ்வொருவரும் அனுஷ்டிப்பது அத்யாவசியமென்பது சொல்லாமலே விளங்கும்.

## தொழிலாளர் இயக்கம்

இப்பொழுது இவ்வுலகிலுள்ள எந்நாட்டை நோக்கினும் பெருங்கடலில் சுழன்று வருமலையைப்போல தொழிலாளர் இயக்கமென்பது மிக்க ஆரவாரம் செய்து கொண்டு நம்முன்னர் தோன்றுகின்றது. இவ்வியக்கமானது ஏதோ சிறுபான்மையானது, இது சீக்கிரத்தில அடங்கிவிடும், என்று எண்ணுவோர் தூரதருஷ்டியின்றியவரே யாவர். இது மேனுடுகளிலுதித்து, பிரகாசம் அதிகம் பெற்று, இப்பொழுது இந்நாடுகளிலும் அதனொளியைப் பரவச்செய்ய ஆரம்பித்துளது. இனி இதனொளி குன்றுமென்பது திண்ணம். இனி இவ்வுலக நிகழ்ச்சியில் இது வேமேலோங்கும்.

இத்தொழிலாளர் இயக்கமென்பது எவ்விதம் தோன்றிற்று என்றுமுதலில் ஆராய்வோம். கைத்தொழில்கள் செய்ய முதலாளிகள் தங்கள் தனத்தை முதலாக வைத்து தொழிற்சாலைகளை ஸ்தாபனம் செய்து அங்குவேலை செய்ய தொழிலாளர்களை அமர்த்திக்கொண்டனர். முதலாளிகளின் கருத்து குறைந்த சிலவில் அதிகவேலையும், லாபமும் பெறவேண்டியதேயாகும். இதை யுத்தேசித்து முதலில் தொழிலாளருக்கு குறைந்த சம்பளம் கொடுப்பது மின்றி வெகு நீண்டநேரம் அவர்கள் வேலைசெய்யும் படியும் செய்துவந்தார்கள். ஒரு சில காலம் தொழிலாளரும் இதற்கு உடன்பட்டு வந்தனர்.

நிற்க, புதிய யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வந்ததனுல், யந்திரசாலைகள் அதிகரிக்கப் பட்டதன் பலனுக, தொழிலாளர் கூட்டம் பெருத்தது. முதலாளிகளுக்கு மேன் மேலும் லாபம் அதிகப்பட்டு வந்தது. எனினும் தொழிலாளர் நிலைமை மேம்படவில்லை. யந்திரசாலைகளுக்கு கஷ்டம் அதிகரித்துக்கொண்டேவந்தது. இதை யறியவேண்டுமாயின் ஆங்கிலத்தில் சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) என்பவர் எழுதியுள்ள கட்டுக்கதைகளினின்று நன்கு தெரிந்து கொள்ளலாம்.

இக்கஷ்டங்களை நிவர்த்திக்கும் பொருட்டு யந்திரசாலைச் சட்டங்கள் செய்யப் பெற்றன. இவைகளாலும் பெரும்பான்மையான ஸவுகர்யங்கள் ஏற்படாமையாலும், உலகத்தில் தோன்றியுள்ள ஜனுயகமுழக்கம் தொழிலாளர் செவிகளிலும் ஊடுருவிச் சென்றமையாலும் தொழிலாளர்கள் ஒன்றி தங்கள் ஸவுகர்யங்களை தாங்களே ஏற்படுத்திக் கொள்வதற்கும், தங்கள் ஸ்வதந்தரங்களை தாங்களே காப்பாற்றிக் கொள்வதற்கு வழிதேட ஆரம்பித்தனர். ஒருவராக இருந்து ஸாதித்துக் கொள்ள வொண்ணுதவற்றை பலர் ஒருங்கு சேர்ந்தால் செய்து முடிக்கலாமென்ற உண்மையை இவர்கள் அறிந்து கொண்டு சங்கஸ்தாபனம் செய்துகொள்ளத் தொடங்கினர். இத்தகைய சங்கங்களும் இப்பொழுது உலகெங்கும் நிரம்பி இருக்கின்றன.

தொழிலாளர்கள் முக்கியமாக கவனிக்கவேண்டியதென்னவென்றால் தங்களுக்கு போதிய அளவு சம்பளம் பெறுதலே. முன்னாட்களில் அவர்கள் பெற்றுவந்த சம்பளங்கள் அவர்கட்கு இப்போது போதவில்லை. ஏனெனில் நாணயத்தின் மதிப்புத் தற்பொழுது குன்றிவிட்டது. அதாவது, உதாரணமாக ஒரு ரூபாய்க்கு வாங்கிவந்த ஒரு பொருளுக்கு இப்பொழுது இரண்டு அல்லது மூன்று ரூபாய்கள் கொடுக்கவேண்டியதாய் விட்டது. இதையே பாமரர்கள் விலையேறிவிட்டதென்பார். இது காரணத்தால் தொழிலாளர் முன்பெற்றுவந்த சம்பளத்தைக் கொண்டு ஜீவனம் செய்வது கடினமாகிவிட்டபடியால், இவர்கள் தங்கள் சம்பளத்தை அதிகரித்துக்கொள்வதற்காகக் கிளர்ச்சி செய்யவேண்டியதாகி விட்டது. பலவழிகளைப் பின்பற்றியும் சரிப்படாமல் இவர்கள் இறுதியில் வேலை நிறுத்தம் செய்தல் என்ற ஆயுதத்தை கையாள ஆரம்பித்து தங்களுக்கு வேண்டிய வஸதிகளைச் செய்து கொண்டுவருகிறார்கள்.

நிற்க, இவ்வியக்கமானது இப்பொழுது இந்தியாவிலும் தலைகாட்டத்தொடங்கியுளது. எங்கே நோக்கினும் தொழிலாளர் சங்கமாகவும் வேலைநிறுத்தமாகவுமே இருக்கின்றது. எனினும், இங்கு தொழிலாளர் இயக்கம் இன்னும் சரிவர காலூன்றவில்லை. ஆயினும் இஃது இங்கும் வேரூன்றி விடுமென்பதும், இதனாலேயே நம் நாட்டிலும் ஜனநாயக உணர்ச்சி பலப்படுமென்பதும் திண்ணம்.

நமது நாட்டில் தொழிலாளர்கள் இன்னும் மிக்கத்தாழ்மையான நிலைமையிலேயே இருக்கின்றனர். ஆகையால் இங்கு ஏற்படும் சங்கங்கள் தற்காலக்குறைகளை நீக்கிக் கொள்வதோடு நின்றுவிடாமல், தொழிலாளர்களுக்கு வேண்டிய ஸவுகர்யங்கள் பலவற்றையும் தேடிக்கொடுத்து அவர்கள் மேலோங்கி வரும்படி செய்தல் இன்றியமையாதது. இராப்பள்ளிகள், புத்தகசாலைகள் முதலியன சங்கங்களோடு சேர்க்கப்படவேண்டும். சுருங்கச் சொல்லின் இனிதொழிலாளர் சங்கங்களும் இவைகளிடத்தில் அனுதாபங்காட்டி ஒத்துழைக்கும். தொழிலாளரின்றியவர்களும் தொழிலாளர்கள் நாட்டிற்கு பேருதவி செய்யக்கூடிய பிரஜைகளாகும் படி செய்ய வேண்டியதே முக்கியமாகச் செய்ய வேண்டிய பணி.

திரு. சே. பால சுப்ரமண்யம்.

---

## ஜமாபந்திக் கொண்டாட்டம் கறணங்கள் திண்டாட்டம்.

(ஒரு நிருபர் எழுதுகிறார்.)

ரிவினியூ டிபார்ட்மெண்டில் ஜமாபந்தி என்று ஒரு மகோத்ஸவம் வெகு காலமாக ஏற்பட்டிருக்கிறதென்பதெல்லாருக்கும் தெரிந்த விஷயம், ஆலயங்களில் வழக்கமாய் நடந்து வரும் உத்ஸவங்கள் சில சமயங்களில் பல காரணங்களால் நின்று விடுகிறதுண்டு. ஜமாபந்தி உத்ஸவம் எந்தவருஷத்திலாவது எக்காரணத்திலாவது நின்ற வழக்கமேயில்லை. ஆலயங்களில் நடக்கும் ஒவ்வொரு நாள் உத்ஸவத்துக்கும் ஒவ்வொரு உபயக்காரர் உண்டு. அதுபோல் ஜமாபந்தி உத்ஸவத்துக்கு கிராம உத்தியோகஸ்தர்கள் உபயகாரர்கள். ரிவினியூ இன்ஸ்பெக்டர் பஞ்சாயித்துதார். சுமார் 5 அல்லது 6 வருஷகாலத்துக்கு முன், முந்தின ஜமாபந்தி, முடிவான ஜமாபந்தி, என்று இரண்டு நடந்து வந்தது. அப்படி நடந்து வந்த ஜமாபந்தி, ஐந்து மையில் சுத்தளவுக்குளுள்ள ஒவ்வொரு குறிப்பிட்ட கிராமத்தில் முகாம்போட்டுபிரோகிராம் ஜில்லாகெஜட்டில் பிரசுரம் செய்து குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட வட்டங்கள் ஜமாபந்தி நடத்திவந்தார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் சாப்பாட்டுக்காக வெகுவாக திண்டாடினாலும் சிலர் ஊர் கிட்ட இருப்பதால் ஊருக்குப்போய் சாப்பிட்டுவிட்டு வருவதுமுண்டு. ஜாமபந்திக்கும் யாதொரு குந்தகமன்னியிலும் நடந்தும் வந்தார்கள்.

இப்படி நடந்துவந்த ஜமாபந்தி வெய்யில் காலத்தில் ஒவ்வொரு முகாமில் ஒரு வாரத்துக்கு குறையாமல் கிராமாந்திரங்களில் போட்டுவருவதால் சிரமமிருக்கிறதென்றும், குருகின ஜமாபந்தி யென்றும் நீண்ட ஜமாபந்தி என்றும் இரண்டாக வைத்து, குருகின ஜமாபந்தியில் மிராசுதார்கள் ஆக்ஷேபணைகள் சொல்லிக் கொள்வதற்காக தாலூகாவில் ஏதோ 4 அல்லது 5 இடங்களில் முகாம் போடுகிறார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் கணக்கை தணிக்கை செய்வதற்காக நீண்ட ஜமாபந்தியை தாலூகா ஹெட்குவாடரிலேயே நடத்த வேண்டுமென்றும் அப்படி நடத்துவதனால் ரொம்ப சௌகரியமுண்டென்றும் ஒரு மகானின் முயற்சியால் ஏற்பட்டு நடந்து வருவதாக தெரிகிறது. அது எவ்வளவு அழகாய் நடந்து வருகிறதென்றால் முன்னிலும் வெகு கேடாய்விட்டது. கிராம உத்தியோகஸ்தர்கள் சொல்ல வொண்ணாத கஷ்டங்கள் அனுபவித்து வருகிறார்கள். ரிவினியூ இன்ஸ்பெக்டர் தணிக்கை தாலூகா ஆபீஸ் தணிக்கை, இந்த இரண்டையும் 4 அல்லது 5 தினத்தில் முடித்துக் கொண்டு டிவிஷனுக்கோ அல்லது ஜில்லா கலெக்டர் ஜமாபந்தியாயிருந்தால் அந்த ஆபீஸுக்கோ போய்ச் சேருகிறார்கள். ஒவ்வொரு ஆபீஸிலும் ஒவ்வொரு குமாஸ்தாக்கள் தணிக்கை செய்வது வழக்கம். ஒரே ஆபீஸில் இரண்டு குமாஸ்தாக்கள் தணிக்கை செய்வது வழக்கமில்லை. கறணங்கள் ஜமா பந்திக்கு வீட்டை விட்டு கிளம்பினது முதல் மூட்டை இரண்டு தூக்கிக் கொண்டு கிளம்புகிறார்கள்.

ஒரு மூட்டை சர்வே சம்பந்தமானது, நடைமுதல் கணக்கு சென்றபசலி கணக்கு என்று இரண்டு வருஷத்துக்கணக்கையும் ஒன்றாய்சேர்த்து கட்டினது ஒரு மூட்டை ஆக இரண்டு மூட்டையுடன் கிளம்புகிறார்கள். மூட்டையின் பருமானம் உயரம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஒன்றை கைபுஜத்தினால் விலாவில் அமுக்கிகொண்டும், மற்றொன்றை தலையில் தூக்கிக்கொண்டும் செல்லுகிறார்கள். வெட்டிகள் இருக்கிறார்களே அவர்கள் தூக்கமாட்டார்களா என்றால், கல நெல்லுகூட வாங்க முடியாத குறைந்த சம்பளம் வாங்கும் வெட்டிகள் (இப்பொழுது இவர்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது) வெளியூருக்கு வந்தால் அவர்கள் படிச்செலவுக்[illegible] என்ன செய்வார்கள்? கறணங்கள் கொடுக்கக்கூடாதோவென்றால் அவர்கள் ஒரு தாலூகா சேவகன் சம்பளத்துக்கு குறைந்து வாங்குகிறார்கள். குடும்பகாலக்ஷேபத்துக்கு திண்டாடும்போது வெட்டிகளுக்கு கொடுக்கசக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். வெட்டியை அழைத்துப்போய் பட்டினி போடுவதைவிட தாமே தூக்குவோமென்று மூட்டையைத் தானே தூக்குகிறார்கள்.

ஜமாபந்திக்காக வெளியில் புறப்பட்ட கறணங்கள் இன்னகாலத்தில் தான் திரும்பி வீட்டுக்குவருவார்கள் என்பது நிச்சயமில்லை. வெகு ஸாவகாசமான ஜமாபந்தி மூட்டைகளை எங்கெங்கு தூக்கிகொண்டு போகிறார்களென்றால், குமாஸ்தாக்கள் கச்சேரி செய்யுமிடம், அவர் சாப்பிடப் போகுமிடம், உறங்குமிடம், கறணங்கள் சாப்பிட போகுமிடம், இம்மாதிரி நாழிகை தவறாமல் தணிக்கை முடிந்து அனுமதி பெற்றுப் போகும் வரையில் தூக்கிக்கொண்டே திரிகிறார்கள். குமாஸ்தாக்கள் ஜமாபந்திக்கு வந்தால் தணிக்கை செய்யும் வேலைமட்டுமல்ல. அவர்களுக்கு அன்றாடம் வரும் தபால்கள் பைசல் செய்யவேணும். பழய பேப்பர், அவசரங்கள், ரிமைன்டர்கள் வந்துகொண்டே இருக்கும். இந்த வேலைகள் செய்யத்தான் அவர்களுக்கு ஸாவகாசம் போறாது. ஆகையால் இவர்கள் அந்த வேலைகளை முடித்துகொண்டு சாவகாசமான வேளையில் தணிக்கைசெய்யப்பார்த்தால் ஸாவகாசமே அகப்படாமல் கறணங்களை காலையில் வா, மாலையில் வா, ராத்திரி சாப்பாடு ஆனவுடன் வாருங்கள் என்று சொல்லுகிறார்கள். ராத்திரி சாப்பா[illegible] ஆனவுடன் சிரமமாய் போய்விடுவ[illegible] மறுநாள் காலையில் வா, தபால்பார்த்தவுடன் வாரும், என்று இம்மாதிரி கறணங்களையும் எட்டிப் போகவிடாமல் காலங்களை பிரட்டிக்கொடுத்துக்கொண்டு அலையவைக்கிறார்கள், இப்படி வரச்சொல்லுங் காலங்களிலெல்லாம் தலைவிதியை நினைத்துகொண்டு வரத்தான் வேண்டும். ஒரு கூப்பாட்டுக்கு எப்போதாவது இல்லாவிட்டால் உடனே கறணனுக்கு சனியன் பிடித்தது. இந்த வைபவ உத்ஸவம் சித்திரை மாதம் அக்னி நக்ஷத்திரதில் ஆரம்பம். இன்னமும் அநேக இடங்களில் ஜமாபந்தி முடியவில்லை. முதல் இரண்டாவது மூன்றாவதென்று அநேக ஜமாபந்தி நடந்து வருகிறது அக்னி நக்ஷத்திர கடுங் கோடையில் பஞசம்போல் கிளப்புகளில் சாப்பாட்டு வழியில்லாத தாலூக்காகளில் ஒரும்மாத ஒன்றைமாதம் ஜமாபந்தி கச்சேரி போட்டு

(11-ம் பக்கம் தொடர்ச்சி)



"Be just aud fear not,
Let all the ends thou aimest at
Be thy Country's, thy God's & Truth's'

ரௌத்திரி௵ ஆனி௴ ௩-ப்வ

16th JUNE 1920.

## நமது நோக்கங்கள்

நமது தமிழ் நாட்டில் அநேக தமிழ் பத்திரிகைகள் உலாவிவருவதால் "ஸமரஸ போதினி" என்னும் ஓர் புதிய வாராந்திர பத்திரிகையை பிரசுரப்படுத்த முன்வருவதின் முக்கிய நோக்கங்களை ஒருவாறு விளக்கிக்காட்டுதல் அவசியமாகிறது. இத்தேசத்தில் பிரசுரிக்கப்படுகிற பத்திரிகைகள் மேல்நாடுகளைப் போல் சங்கியையிலும செல்வாக்கிலும் அவ்வளவு அதிகப்படவில்லையென்றாலும் நமது தேசத்தில் பத்திரிகைகளால் இச்சமயமாகவேண்டிய வேலை அநந்தம். ஆகவே பத்திரிகைகள் மிதமிஞ்சி ஏற்பட்டு விட்டன என்று நினைப்பதற்கு இடமில்லை ஒழுங்கான வழிகளில் பொது ஜன அபிப்பிராயங்களை உருவாக்கிவிடுகிற பிரயத்தனங்களில் பத்திரிகைளே மிகச்சிறந்தவை. பிரசங்கமூலயமாய் பொதுஜன ஊழியம் சரிவர ஒருவாறு செய்ய முடியுமென்றாலும் அவைகள் மாத்திரம் போதாது. அதற்கு நூற்றுக்கணக்கான பத்திரிகைகளும் வேண்டும். பத்திரிகைகளின் வாயிலால்தான் பொதுஜன அபிப்பிராயத்தை வெளியிடக்கூடும். பொதுஜன அபிப்பிராயமும் ஒருவாறு ஒழுங்குபடக்கூ[illegible]ம். ஏனெனில் அவைகளைக கொண்டுதா[illegible] பொதுஜனங்களுக்கு எல்லா விஷயங்களிலும் நிஜ அறிவைப் புகட்டமுடியும். பிரசங்கங்கள் செய்யும்போது மாத்திரமே அன்றி பத்திரிகைகளில் எழுதும் போதும் பேசுபவரும் எழுதுபவரும் சத்தியததையே நாடி நிற்கவேண்டும். ஒருவரை பெயரைக் குறித்தாகிலும் ஒரு சமூகத்தைச் சுட்டியாகிலும் வீணாக மனக் கசப்பை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளை பிரயோகிக்கலாகாது. ஒருவிஷயத்தின் உண்மையைநன்கு ஆராய்ந்த பிறகேதான் அர்த்தத்தை வெளியிட வேண்டும். எவ்விஷயத்தையும் ஆதரிக்கும் பொழுதும், அல்லது கண்டிக்கும் பொழுதும் நிதான புத்தியோடு இருத்தல் அவசியம் உண்மையை உண்மையான தைரியத்தோடு உரைக்கவேண்டும் நம்மைச் சேர்ந்தவர் இவர், நம்மை அண்டினவர் இவர், நம்மை புகழ்ந்து பேசுபவர் இவர், ஆகையால் இவரை ஆதரிக்கவேண்டும். நம்மைச் சேராதவர் அவர் நம்வழியே செல்லாதவர் அவர் நம் சொல்லை பாராட்டாதவர் அவர் ஆனதால் அவரை தூஷிக்கவேண்டும் என்கிற கொள்கையை நாம் அடியோடு விட்டுவிடவேண்டும்.

இவரோடு இச்சமயம் சேர்ந்தால் நமக்கு கௌரவம் செல்வாக்கு பண உதவி ஏற்படுமென்றும், அவரோடு முன் மாதிரி சேர்ந்து உழைத்தால் கௌரவம் செல்வாக்கு முதலியவை நம்மிடமிருந்து அகலும் என்கிற எண்ணம் தேசத்தொண்டு செய்கிற எந்த பத்திராதிபரின் உள்ளத்திலும் உதிக்கக்கூடாது ஆகையால் நாம் சத்தியத்தைக் கைக்கொண்டு சத்தியத்தையே நாடி பொது ஜன அபிப்பிராயத்தையே ஆதரிக்க வேண்டும். ஜாதிமதவேற்றுமை அன்னியில் எல்லோரையும் சகோதரராக பாவித்து ஒற்றுழைத்தால் நமது தாய் நாடு செழித்தோங்கும். இல்லையேல், சண்டைசச்சரவுகள் நம் முன் என்றைக்கும் குடிகொண்டு தேசத்தின் முன்னேற்றத்திற்கு ஹானியை விளைவிக்கும்.

அதற்கு இடம் கொடுக்காமல் ஸமரஸ நிலையில் நின்று தேசத் தொண்டு செய்வதே நமது முக்கிய நோக்கம்.

தேசபக்தர்கள் நெடு நாளாய் நமது முன்னேற்றத்திற்கு உழைத்துவரும் பயனாகவும நமது தேசத்தில் ஒருவித கிளர்ச்சி ஏற்பட்டு பல புது நோக்கங்களும் தேவைகளும் நாளுக்கு நாள் தோன்றி வருகின்றன. அத்தேவைகளையும் சரிவர கவனித்து பொது ஜனங்களின் உரிமைகளைப்பற்றியும் அரசுமுறை அமைப்பைப்பற்றியும் அறிவூட்டுநம் விஷயத்தில்சிரத்தையோடு உழைக்க மனமுள்ளவர்கள் இன்னாளில் எத்தனைபேர் முன்வந்தாலும் அதிகமாகாது. சென்ற வருஷத்தின் இறுதியில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையால் நிர்மாணிக்கப் பட்ட புதிய இந்திய அரசாங்க சீர்திருத்த சட்டம் அனுஷ்டானத்திற்கு வரும் தருவாயில் அச்சட்டத்திலுள்ள குற்றம் குறைகளை செவ்வனே நாமெல்லோரும் அறியவேண்டியது அவசியமாகிறது அதுநிற்க, நாம் எவ்விதம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டு நமது பிறப்புரிமைகளை அடைந்து நமது தேசத்திற்கு சுய ஆட்சிசீக்கிரம் அடைய எவ்வாறு முயலவேண்டும். அச்சட்டத்தால் ஏற்படும் அரசாங்கசபைகளில் எத்தகையவரை நமது பிரதிநிதிகளாக நாம் தெரிந்தெடுக்க வேண்டும்?

அப்படிச் செய்வதற்காக நமக்கேற்பட்டுள்ள "வோட் கொடுக்கும் சுதந்திரத்தை நாம் எவ்விதம் பிரயோகிக்கவேண்டும்? அச்சபைகளில் நமது தேசமுன்னேற்றத்தை உத்தேசித்து நமது பிரதிநிதிகள் எவ்விதம் பாடுபடவேண்டும், அப்படி அவர்கள் பாடுபடும்படி செய்ய அவர்களைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் பெற்ற நமதுகடமைஎன்ன, இம்மாதிரி இன்னும் அநேக விஷயங்களைப் பற்றியும் நமது சுதந்திரம், கடமை, இவைகளைப்பற்றியும் பாரபட்சமின்றி எடுத்துரைப்பதும் இப்பத்திரிகையின் முக்கிய நோக்கமாகும்.

தற்சமயம் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தேசசேவையில் சிரத்தை பாராட்டத்தலைப்பட்டுவிட்டார்கள். இதற்கறிகுறியாகநமது நகரவாசிகள் மட்டுமல்ல கிராமங்களில் வசிப்போரும் நமது தேசம் முன்னேற்றமடைய வேண்டுமென்றும், நமக்கு "சுய நிர்ணயம்" வேண்டுமென்றும் தாம் ஸமரஸ பாவத்தோடு வாழவேண்டு மென்றும், தேசத்தின் வறுமை முதலிய கஷ்டங்கள் அடியோடு அற்றுப்போக வழிதேட வேண்டுமென்றும், கவலை கொண்டு பல வழிகளில் உழைகக ஆரம்பித்து விட்டார்கள். இவ்வித உழைப்புக்கு உதவி புரிவதே எமது முக்கிய அலுவளாகும்.

தவிறவும் நமது தேசத்தின் ராஜபாஷை ஆங்கில மாதலாலும் அவ்வாங்கிலத்தில் பல நூல்களில் அரசியல், செல்வம், கைத்தொழில், வணிகம், முதலிய தேச முன்னேற்றத்திற்கு உதவும் பிரயத்தினங்களைப்பற்றியும் அரிய பெரிய விஷயங்கள் புதைந்து கிடைப்பதை ஆங்கில பயிர்ச்சியில்லாத நமது சகோதரர்களின் தேர்ச்சியை முன்னிட்டு தெளிவாய் எடுத்து புகட்டுவது இப்பத்திரிகையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

ஆனதுபற்றி நமது சந்தாதார்களுக்கு ஊக்கத்தையும் தேசாபிமானத்தையும் நாளாவட்டம் உண்டுபண்ணத்தகும் கூட்டுறவு சம்மந்தமான சமாசாரங்களும், நீதி முறைகளும், பௌத்திக ரஸயான, தத்வ சாஸ்திர (ஸயன்ஸ்) விஷயங்களும், அரசிரை, அர்த்த சாஸ்திரம், ராஜாங்க வரவு செலவு சம்மந்தமான நுட்பங்களும் விரிவாய் கூறப்படும். தவிரவும், எமது நமுதுக்குவரும் விஷயங்களைப்பற்றியெல்லாம் பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்துப் உள்ளது உள்ளபடி கள்ளம் கபடின்றி உத்திரவாதம் இன்னதென்று உணர்ந்தும் கூறுவோம். மேலே சொன்ன விஷயங்களோடு ஸ்தல சுய அரசாட்சி, கல்விப் பயிர்ச்சி, சுகாதார தத்வம், விவசாயம் முதலிய விஷயங்களைப்பற்றியும் முக்கியமாய் கவனிக்கப்படும்.

தற்சமயம் நமது தேசாபிவிருத்தியை உத்தேசித்து உழைத்து வருபவர்களுள் முக்கியமாய் தேவையானது ஸமரஸ நிலையே ஆதலாலும் அதில்லாததால் நமது விரோதிகளுக்கு நகைப்புக்கு இடம் உண்டாவதை தடுக்க ஒருவாரு முயலவேண்டுமென்ற உத்தேசத்தைக்கொண்டே இப்பத்திரிகைக்கு "ஸமரஸ போதினி" என்று நாம கரணம் செய்யலாயிற்று. ஆனதால் இப் பத்திரிகை மிதவாத கட்சியைச் சார்ந்ததென்றாவது அலலது தேசிய கட்சியின் நோக்கத்திற்கு இணங்காதென்றாவது நினைப்பது தவறாகும். மிதத்திலும் அமிதமுண்டு. அமிதத்திலும் மிதமுண்டு. ஆகையால் எல்லாவற்றையும் சீர்தூக்கி நமது

புத்திக்கு எட்டியமட்டில் எடுத்துரைப்பதே நமது முக்கிய கடமை என்று கருதி தேச சேவை செய்ய முன் வந்தோம்.

## மகாண மகாநாடு.

சென்னை 26-வது மகாண மகாநாடு திருநெல்வேலியில் நாளது ஜூன் மாதம் 21உ கூடப்போகிறது. அம் மகாநாடு மிகவும் முக்கியமானது. மகாண பொது ஜனங்களின் பிரதிநிதிகளடங்கிய மகா சபையில் தான் மகாண சம்மந்தமான விஷயங்களும், நமது தேசத்தின் முன்னேற்றத்திற்கு ஒத்ததான சங்கதிகளும் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் செய்யப்படும். தற்சமயம் தேச மகா ஜனங்களுக்கு பல விஷயங்கள் மகாக் கவலையை உண்டுபண்ணியிருக்கின்றன. அதாவது துருக்கி கிலாபத்து விஷயம், ஹண்டர் கமிட்டி ரிபோர்ட், சீர்திருத்த சட்டத்தின் விதிகள், சட்டசபைகளின் அமைப்பு, முதலிய பல முக்கியமான விஷயங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். நூற்றுக்கணக்கான தேசீய கட்சியார்கள் விஜயம் செய்வார்கள். நமது மிதவாத நண்பர்கள் ஒதுங்கி நிற்காமல் மேற்படி மகாநாட்டிற்கு வருவதான் உசிதம். அவர்களை வரக்கூடாது என்று ஒருவரும் சொல்லவில்லை. அவர்கள் வந்து தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிடவேண்டியது இச்சமயம் அத்யவசியமாகும். சபையின் முன் ஆலோசனைக்கு வரப்போகும் விஷயங்கள் எல்லோரையும் ஸமமாய் பாதிக்கக்கூடியவை யாதலின் அபிப்பிராய பேதங்கள் இருப்பதற்கு நியாயமே இல்லை. இதை அறிந்து மிதவாதிகள் மகா நாட்டிற்கு வராமலிருக்க மாட்டார்களென்று நம்புகிறோம்.

தங்கள் கடமையை யுணர்ந்து சிலர் வந்தால் அவர்களை நாம் மரியாதையோடு நடத்துவோமென்பதற்கையமில்லை. இச்சமயம் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ஒன்றுப்பட்டிருக்கும் சமயமென்று பறையடித்து வருகிறோம். அப்படியிருக்க நம் மிதவாத சகோதரர்களோடு சண்டை செய்வது சரியல்ல. அவர்களும் தேச பக்தர்கள் தான். அவர்களின் சிற்றறிவிற்கு எட்டின வரையில் தேச சேவைசெய்து வருகிறார்கள். அவர்களும் அபிப்பிராயங்கள் பிசகாயிருக்கலாம். சில விஷயங்களில் அபிப்பிராயங்கள் நமக்கு விரோதமாயிருக்கலாம். இருப்பினும் அவர்களை நாம் துவேஷிக்க மாட்டோம். மரியாதை குறைவாக பேசவுமாட்டோம். அமிர்தஸரஸ் காங்கிரஸ் ஸபையில் அவர்கள் பேசும் பொழுது ஸவதானத்துடனும் பொருமையுடனும் அவர்கள் சொல்வதை பிரதி நிதிகள் கேட்ட விஷயம் அவர்களுக்கும் தெரியும் ஆகலால் மிதவாதிகள் தங்களுடைய அபிப்பிராயத்தை மகா நாட்டில் வெளியிடுங்கால் அவ்வபிப்பிராயத்தை பிரதி நிதிகள் ஒரு சமயம் ஒப்புக்கொள்ளாத பட்சத்தில் வருத்தமுறக்கூடாது. மெஜாரிட்டியின் அபிப்பிராயத்திற்கிணங்கி நிற்கவேண்டியது. இதுதான் நியாயம் "நாங்களும் காங்கிரெஸைச் சேர்ந்தவர்கள் தான்" என்று சொல்லிக்கொள்ளும் மிதவாதி சகோதரர்கள் அவர் சொல்வது உண்மையாயின் மகாண மகா நாட்டிற்கு வருவார்களாயின் அதுவே அவர் சொல்வதற்குச் சிறந்த அத்தாட்சியாகும்.

பிராமணர், பிராமணரல்லாதார் என்னும் வித்யாசத்தை பாராட்டாமல் நம்மவர் ஒரு மனதோடு வேலை செய்யவேண்டிய தருணம் இது. இதை கவனியாமல் நமது பிராமணரல்லதாரும் அவர்களின் தலைவர்களும் ஒதுங்கி நிற்கக்கூடாது; அவர்களும் எல்லோருடன் கலந்து தேச சேவை செய்வார்களென்றும் மகாண மகா சபைக்கு ஏராளமாய் வருவார்களென்றும் நம்புகிறோம்.

## சமாசாரக் குறிப்பு.

சென்ற ஜூன் மீ 6உ மாலை 6 மணிக்கு அம்மா பேட்டை போர்டு எலிமெண்டரி பாடசாலைக் கட்டிடத்தில் தபால் சேவகர்களின் சங்கத்தின் ஆதரவின் கீழ்ஒரு மீட்டிங் நடை பெற்றது. தஞ்சையிலிருந்து ஸ்ரீமான் இ. சூரிய நாராயண அய்யாவர்கள். விஜயம் செய்திருந்தார். அச்சமயம் அகவிலை யேற்றத்திற் கிணங்க சம்பள வுயர்வு ஏற்பட உடனே உத்திரவு பிறக்க வேண்டுமென போஸ்ட்மாஸ்டர் ஜனரல் அவர்களுக்கு அனுப்பிய மஹஜரைப்பற்றியும் உடை, குடியிருப்புபிடம், முதலிய வஸதிகளில்லாததல் அவர்களுக்குள்ள குறைகளைப் பற்றியும் விஸ்தாரமாய் எடுத்து ஸ்ரீமான் அய்யரவர்கள். ஸ்ரீ கண்ணுசாமி பிள்ளை அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் பேசினார் ரயில் சேவகர்களின் கஷ்ட நிலைமைப் பற்றி அக்கிராசனர் போஸ்ட் மாஸ்டர் ஜெனராலுக்குத் தந்தி கொடுக்கும்படி தீர்மானிக்கப் பட்டது:—

தஞ்சை மணிக்கூண்டு மைதானத்தில் ஜூன் மீ 10உ மாலை 6 மணிக்கு ஒரு மகா நாடு கூடிற்று அச்சமயம் திருநெல்வேலியில் நாளது 21உ யில் கூடப்போகும் சென்னை மகாண 26 கான்பரன்ஸுக்கு பிரதி நிதிகள் தெரிந்தெடுக்கப் பட்டார்கள் மேலும் மாகாண கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டுக்கு வருஷா வருஷம் செலுத்த வேண்டி பகுதி விஷயமாய் மெஸ்டன் பிரபுவின் தீர்மானத்தைக் கண்டித்தும் பஞ்சாபில் சமீபத்தில் நேர்ந்த சம்பவங்களைப் பற்றி விசாரிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட ஹண்டர் கமிட்டியார்களின் ரிபோர்ட்டைக் கண்டித்தும் மேல் கண்ட சம்பவங்களுக்கு ஜவாப்தாரியான அதிகாரிகளை சரியான தண்டனைக்குள் படுத்த வேண்டுமென்றும், வருகிற ஜூலை மாதத்தில் திருச்சியில் கூடப் போகும் மிலச்சுவாந்தார்களின் மகா நாட்டிற்கு நமது ஜில்லாவாசிகளும் கண்ணம்பாடி அணை, மருசெட்டில் மெண்டு, விஷயங்களைப் பற்றி ஆலோசித்து சரியான தீர்மானங்கள் செய்யுமாறு அவர்களோடு ஒத்து உழைக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

நூதனமாய் ஏற்படப் போகும் சட்ட சபை ஸ்தானங்களுக்கு இது வரையிலும் நமது ஜில்லா பிரதி நிதிகளாக தெரிந்தெடுக்கப் படுமாறு அடியில் கண்ட சனவான்கள் அபேக்ஷகர்களாக முன் வந்திருக்கிறார்கள்.

மாகாண சட்ட சபைக்காக 1. கும்பகோணம் ஸ்ரீமான் ராவ் பகதூர் N. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் B. A. B. L.

2. நாகை ஸ்ரீமான் ராவ் பகதூர் K. S. வெங்கடராமய்யரவர்கள். B. A.

3. நாகை ஸ்ரீமான் V. P. பக்கிரிசாமி பிள்ளையவர்கள்.

மகம்மதிய தொகுதிக்கு.

4. கனம் கான்பகதூர் A. K. G. அகமத் தம்பி மரக்காயர் அவர்கள்.

இந்திய கிரிஸ்தவ தொகுதிக்கு.

5. திருச்சி மகா-ா-ா-ஸ்ரீ அர்புதசாமி உடையாரவர்கள் B. A. L. T.

6. இந்திய லெஜிஸ் லேடிவ் சபைக்கு திருச்சி தஞ்சை தொகுதிக்கு

(1) ஸ்ரீமான் ஸர் பி. எஸ். சிவசுவாமி அய்யர் அவர்கள். B. A., B. L, K. C. S. I. C. I. E.

(2) ஸ்ரீமான் திவான் வி. பி. மாதவராயரவர்கள். B. A. C. I. E.

சென்னை எஞ்சினீரிங்கு கலாசாலைச் சேர்ந்த ஸ்ரீமான் P சுப்பராவ் அவர்கள் B. A. ஆர்மோனிய வாத்திய த்துடன் அதை வாசிக்கும் பொழுதே மின்சார சக்தியால் ஜலதரங்க வாத்தியம் வாசிக்கும்வண்ணம் ஓர் நூதனக்கருவியை கண்டு பிடித்திருக்கிறார். இந்தியர்களின் நுண்ணிய அறிவுக்கு இதுவும் ஓர் அத்தாக்ஷியாகும்.

திருநெல்வேலியில் நடை பெறும் ராஜீய மகா நாட்டுடன் வர்ணாச்ரம தர்ம மாகாண கான்பரன்ஸ் ஒன்று கூட்டப் படுமென தெரிய வருகிறது. அதே சமயத்தில் ஆசார சீர் திருத்த கான்பரன்ஸும் நடக்கும். இவை விஷயமாய் விசனிக்கத்தக்க சில அபிப்பிராய பேதங்கள நம்மவர்க்குள் இச்சமயம் ஏற்பட்டிருப்பதை நோக்க வருந்துகிறோம். கான்பரன்ஸ் பந்தலில் ஜனங்களுக்கு பொதுவாய் உள்ள விஷயங்கள். நடை பெறுவது சிலரபிப்பிராயத்திற்கு விரோதமா யிருப்பினும் அவை மத விஷய மாயினும் சரி ஆசார சீர் திருத்த விஷயமாயினும் சரி வேறு எவ் விஷயமாயினும் அவைகளின் உண்மையை ஆராய்ந்து பார்ப்பதே நமது தேசத்தின் முன்னேற்றத்திற்கு துணை படும் கருவி யாதலால் இவ்விஷயங்களிலும் கூட நம் ஜனத் தலைவர்கள் சமரஸ நிலைமையை நாடி ஒற்றுழைக்க வேண்டுவது அவசியமாகும். பந்தல் ராஜீய விஷய ஆலோசனைக்கென்று ஏற்பட்டிருப்பினும் ஆசார சீர் திருத்த கான்பரன்ஸ் நடைபெற இடம் கொடுத்ததைப் போல வர்ணாச்ரம தர்மங்களை ஆலோசிக்க இடம் கொடுப்பதால் யாது தீங்கு விளையுமோ? நமக்குப் புலப்படவில்லை.

“சென்னை மாகாண கவர்ன்மெண்டார் 1920 மே மீ 10உ யுள்ள பின் வரும் ரெவி[illegible] இலாகா?1071 நெ உத்திரவு பிறப்பித்திரு[illegible]ர்கள். 1920 இ பிப்ரவரி மீ 2உ யுள்ள ரெவினியூ 271 நெ. உத்திரவில் கவர்ன்மெண்டார் லேபர் கமிஷனரோடு தொழிலாளிகள் விஷயங்களில் ஊக்கமும் பிரக்ஞையுமுள்ள கனவான் களடங்கிய ஓர் புத்திமதி கூறும் சபையை ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாய் வெளியிட்டிருந்தார்கள். அதற்கிணங்க கவர்ன்மெண்டார் இப்பொழுது பின்வரும் கனவான்களை அச்சபையின் மெம்பர்களாக நியமிக்க தீர்மானித்திருக்கிறார்கள். (1) கனம் J. F. வில்ஸன் துரையவர்கள் (2) கனம் திவான் பகதூர் P தியாகராஜசெட்டியாரவர்கள் (3) மகா-ா-ா ஸ்ரீ எஸ் ஸ்ரீநிவாச அய்யங்காரவர்கள் (4) ரெவரெண்டு C. H. மோனஹன் துரையவர்கள் (5) மகா-ா-ா-ஸ்ரீ A. P. பாத்ரோ அவர்கள் (6) திவான் பகதூர் P. கேசவப் பிள்ளையவர்கள் (7) மகா-ா-ா ஸ்ரீ C. ராஜகோபாலாசாரியாரவர்கள் இந்த போர்டுக்கு உத்தியோக தோரணையில் லேபர் கமிஷனரே அக்கிராசனாதிபதியாவர். இனியாகிலும் தொழிலாளர்களுள் அடிக்கடி ஏற்படுகிற குழப்பங்கள் கட்டோடு நின்று போய் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் அன்யோன்னியம் அதிகரித்து சமரஸ நிலையில் சுகமாயிருப்பாரென கருதப் படுகிறது.



மகா-ா-ா-ஸ்ரீ சத்ய மூர்த்தி அய்யரவர்கள் மிதவாதிகளைப் பற்றி தான் தன் பிரசங்கங்களிலொன்றில் ஒரு அஸப்யமான வார்த்தையை தவறுதலாய் உபயோகித்ததைப் பற்றி இந்து பத்திராதிபருக்கு எழுதிய கடித மூலமாய் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறார். இதே மாதிரி பங்காளத்தில் கனம் சுரேந்திர நாத் பானர்ஜி யவர்களைப் பற்றி அமிருத பஜார் பத்திரிகை ஹண்டர் கமிட்டி ரிபோர்[illegible]ஸம்பந்தமாய் பிரசுரித்த ஓர் வதந்தியை புனரா[illegible]லோசனையின் பேரில் வாபிஸ் வாங்கிக் கொண்டு அது விஷயமாய் மன்னிப்பு கேட்டுக் கொள்ளுவதாக கூறுகின்றது.

சமீபத்தில் காசிமாநகரத்தில் கிலாபத் சம்பந்தமான ஒற்றுழைமையைப் பற்றியும் ஹண்டர் கமிட்டி ரிபோர்ட்டைப் பற்றியும் சீர் திருத்த சட்ட விதிகளைப் பற்றியும் சவிஸ்தாரமாய் ஆலோசிக்கும் பொருட்டு கூடின எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டி சபையார் மேற்படி விஷயங்களைப் பற்றி இந்திய ஜன சமூகத்தின் அபிப்பிராயத்தை அறியும் பொருட்டு கூடிய சீக்கிரம் ஒரு விசேஷ காங்கிரெஸ் மகாநாடு கல்கத்தாவில் கூட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இச்சபை வருகிற ஆகஸ்டு, செப்டம்பர் மாசத்தில் கூடலாமென கருதப் படுகிறது. தட்சிணத்தில் உள்ள பிரமூகர்கள் அதை ஜப்பல்பூரில் நடை பெற வேண்டுமென்றும், நமது ஆந்த்ர நேயர்கள் பர்காம்பூரில் நடை பெற வேண்டுமென்றும் பூர்ணமாய் முயன்று வருவதாக தெரிய வருகிறது.

வருகிற ஜூலை மீ 13உ காலை 11 மணிக்கு சென்னையில் சென்னை சட்ட நிருபண சபை கூடப் போகிறது. அது அவ்விடம் கூடுமென பின்னர் அறிவிக்கப் படும.

பாபநாசம் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்களின் சங்கம் நாளது மீ 13உ மாலை 3 மணிக்கு பாபநாசத்தில் மகா-ா-ா-ஸ்ரீ C. S. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் கூடிற்று அப்பொழுது நமது மாகாண கவர்ன்மெண்டார் பிறப்பித்திருக்கிற ஜூன் மீ 1உ யுள்ள 499 F. நம்பர் உத்திரவு கிராம உத்தியோகஸ்தரின் சமபள உயர்வைப்பற்றி சரியான பரிகாரத்தை உண்டுபண்ணியிருக்கிறதாவென்கிற விஷயத்தைத் தீர ஆலோசனை செய்த பின். பின் வரும் தீர்மானங்கள் ஷை சங்கத்தாரால் செய்யப்பட்டன:—

கர்ணன் சம்பளத்தை ரூ 15 ஆக உயர்த்தின தற்க[illegible]வர்ன்மெண்டாருக்கு நன்றியைக் காட்டுவதுட[illegible] ரூ 30 க்கு குறையாமல் சம்பளமேற்பட்டாலொழிய கர்ணன்களின் குறைகள் ஒருக்காலும் நீங்காவெனவும் கிராம முன்ஸீப்களின் சம்பள உயர்வைப்பற்றி கொஞ்சமேனும் கவனியாதிருப்பதைப்பற்றி இச்சங்கம் மிகவும் வியசனிக்கிறதென்றும் அவர்கள் சம்பளத்தையும் அவர்கள் அந்தஸ்துக்குத் தக்கவாறு சரியானபடி உயர்த்திக்கொடுக்கவேண்டுமென்றும் அப்படிக்கு உயர்த்தும் வரையில் இந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு கர்ணனும் தங்களுக்கேற்பட்டிருக்கும் சம்பள உயர்வின பிரயோஜனத்தை அடையத் தயாரில்லை யெனவும், சங்கத்தின் மூலதனத்திற்காக ஒவ்வொரு கர்ணனும் குறைந்த பக்ஷம் ரூ 5 கன் கொடை கொடுக்கவேண்டுமெனவும், நாளது 1329ம் பசலிக்காக ஏற்படும் ஜமாபந்திப்படி முதலிய படிகளை இத்தாலூகா கிராம உத்தியோகஸ்தரனைவரும் பெற உடனே விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீமான் A. ரெங்கஸாமி ஐயங்காரவர்களின் விஜயம்:—சென்ற 3, 4 நாளை சென்னை “சுதேசமித்திரன்” பத்திராதிபர் ஸ்ரீமான் A. ரெங்கஸாமி ஐயங்காரவர்கள் B. A., B. L, F. M. U., பாபநாசம், ஐயம்பேட்டை, ராஜகிரி முதலிய விடங்களில் உபன்யாஸம் செய்துவிட்டு நாளது மீ 13உ மாலை தஞ்சை மணிகூண்டுக் கடுத்த மைதானத்தில் ஸ்ரீமான் V. P. மாதவராவ் அவர்கள் C. I. E., அக்ராஸனத்தின் கீழ் “நமது தேசத்தின் தற்கால நிலைமையும நமது கடமைகளும்” என்னும் அரும் விஷயத்தைப்பற்றி வெகு விமர்சையாய் ஓர் உபன்யாஸம் செய்தார்.

நாளது ஜூன் மீ 22உ செவ்வாய்க்கிழமை தஞ்சாவூர் முனிசிபல் மூன்றாவது வார்டில் காலியாயிருக்கும் கவுன்ஸிலர் ஸ்தானத்திற்கு ஒருவரைத் தெரிந்தெடுக்க ஓர் எலெக்ஷன் நடைபெறும். அந்த ஸ்தானத்திற்கு மகா-ா-ா-ஸ்ரீ T. D. ஸ்வாமிநாதய்யரவர்களும், T. R. ஸ்ரீனிவாஸ ஐயங்காரவர்களும், V. P வெங்கட கிருஷ்ண நாயிடு காருவும் அபேக்ஷகர்களாக முன் வந்திருக்கிறார்களென அறிகிறோம். மேல் சொன்ன மூன்றாவது வார்டு எலெக்டர்கள் தங்கள் ஓட்டுக் கொடுக்கும் சுதந்தரத்தையும், பொறுப்பையும், நன்குணர்ந்து பக்ஷபாதமின்றி விஷயங்களை கவனித்து பயமன்னியிலும் தாக்ஷிண்ய மன்னியிலும் கௌன்ஸிலில் ஜனங்களின் நன்மையையே கருதி போராடுவோருக்கே தங்கள், வோட்டைக் கொடுப்பார்களெனக் கருதுகிறோம்

---

ஸமரஸபோதினி பத்திராதிபர் அவர்களுக்கு:—

ஐயா, தங்கள் அரும் பத்திரிகையில் நான் இத்துடன் அனுப்பியிருக்கும் “வேண்டுகோள் விகிதம்” த்தைப் பிரசுரிப்பீர்களென நம்புகிறேன்.

தஞ்சாவூர் 14-6-20. தங்கள் ஊழியன், T. R. ஸ்ரீனிவாஸ ஐயங்கார்,

### தஞ்சாவூர் மூன்றாவதுவார்டு எலெக்டார்களுக்கு ஓர் வேண்டுகோள் விகிதம்:--

நாளது ஜூன் மீ 22உ யன்று மூன்றாவது வார்டில் நடைபெறும் முனிஸிபல் எலெக்ஷனுக்கு நான் ஓர் அபேக்ஷகனாக முன்வந்திருக்கிறேன். 1916ஷு ஆகஸ்டு மீ 15உ முதல் மூன்று வருஷங்களுக்குத் தங்கள் வார்டின் பிரதிநிதியாயிருந்த பாக்கியத்தை நான் பெற்றிருந்தேன். பிறகு எனக்கு நேர்ந்த சில அஸந்தர்ப்பங்களை முன்னிட்டு என் ஸ்தானம் காலியான பின் நான் மறுபடி ஷை ஸ்தானத்தை உத்தேசித்து தங்களை என்னைத் தேர்ந்தெடுக்கும்படி வேண்டிக்கொள்ள முன்வரவில்லை.

முனிஸிபல் நிர்வாக கர்மங்களையும், ஜனங்களுடைய தேவைகளையும் நான் நன்குணர்ந்திருக்கிறேன். அத் தாக்ஷியாக நான் கௌன்ஸிலராயிருந்த பொழுது என் மனச்சாக்ஷிக்கு விரோதமன்னியிலும் பிறர் தூஷணைக்குட்படாமலும் நகர பரிபாலன விஷயங்கள் அனைத்திலும் பாடுபட்டு வந்திருக்கின்றேன். அவைகளைப் பற்றி விவரமாய் இங்கெடுத்துச சொன்னால் அது விரியுமாதலால் சில விஷயங்களை மட்டில் சுருக்கிச் சொல்கிறேன்.

1. நமது முனிஸிபாலிடியால் நடத்தப்பட்டுவரும் எலிமெண்டெரி பாடசாலைகளிலெல்லாம் சம்பளம் வசூலிக்காமல் கல்வி புகட்டவேண்டுமென்றும்,

2. முனிஸிபல் சங்கத்தாரால் தஞ்சாவூர் டிஸ்திரிக்டு போர்டுக்கு கொடுபட்டு வரும் சங்கவருமானத்தின் மூன்றில் ஒரு பகுதியைக் குறைத்து முனிஸிபல் எல்லைக்குட்பட்ட ரஸ்தாக்களையும் தெருக்களையும், சந்துகளையும் செவ்வைப்படுத்தக் கருதியும்,

3. முனி[illegible] கட்டுகள் முதலியவற்றைப் புதிப்பித்து அதன் மூலமாய் அவைகளின் சுகாதார நிலைகளை சீர்திருத்தியும் முனிஸிபாலிட்டியின் வருமானமும் அதிகப்பட வழி தேடியும்,

4. நூற்றுக்கணக்கான என்குரோச்மெண்டு விஷயங்களில் ஜனங்களின் ஸ்வதந்தரைத்தை வழுவவிடாது நியாய வழியிற் போராடியும்,

5. முனிஸிபல் வரி கொடுப்போரில் பெரும்பான்மையோருக்கும் பெண்பாலருள்பட வோட்டுக்கொடுக்கும் உரிமையை உண்டாக்கவும்,

6. முனிஸிபல் சட்ட ஸம்பந்தமாய் கவர்ன்மெண்டாரால் அப்போதைக் கப்போது பிறப்பிக்கப்பட்டு வரும் உத்திரவுகளில் கண்ட விஷயங்களைப்பற்றி வரி கொடுப்போரின் சுதந்தரத்தைக் கருதி முனிஸிபல் சங்கம் அபிப்பிராயம் கொடுக்கும் வண்ணம் பல ரிபோர்டுகள் எழுதியும்,

7. கௌன்ஸில் என்னை ஏற்படுத்திய கமிட்டி ஸ்தானங்கள் ஒவ்வொன்றிலும் அக் கௌன்ஸிலால் எனக்கிடப்பட்ட உத்திரவுகளை ஒவ்வொன்றையும் என்மனச் சாக்ஷிக்கும் வரிகொடுப்போரின் உரிமைக்கும் விரோதமன்னியில் வேலை செய்து வந்திருக்கிறேன். எனக்கு எப்பொழுதாவது அபிப்பிராய பேதமேற்பட்டால் அதை வெளியிடப் பின் வாங்காமல் பல முறையும் என் அபிப்பிராயத்திற் கிணங்காமல் மற்றெல்லோருமிருப்பினும் என் அபிப்பிராயங்களை பகிரங்கமாய் எழுதி ரிகார்டு செய்திருக்கிறேன். தவிரவும் வரிகொடுப்போர் எவரும் என்னிடம் நேரில் புகார்செய்த ஒவ்வொரு விஷயங்களைப்பற்றியும் காலஹரணமன்னியில் நேரில் பரிசீலனை செய்து பரிகாரந் தேடியிருக்கிறேன். முனிஸிபல் நிர்வாக அதிகாரிகளிடம் நான் நேரில் கண்ட குற்றங் குறைகளை அப்போதைக் கப்போது எடுத்துச் சொல்லி அக்குறைகளை நிவர்த்திக்க முயன்றிருக்கிறேன். முனிஸிபல் அக்கறைக்கு விரோதமாய் வேலை செய்யும் விப்பந்திகளைக் கண்டிக்கவும் வழிதேடியிருக்கிறேன். முனிஸிபாலிடியின் வரவு செலவு திட்டங்கள் சரிவர ஏற்படுத்துவதற்காக வேண்டுமளவு பிரயாஸை யெடுத்துக்கொண்டிருக்கிறேன். முனிஸிபல் வார்டுகள் பிரிவினை விஷயமாய் வேண்டிய பிரயாஸை யெடுத்துக்கொண்டும், முனிஸிபல் பைலாக்கள் (உபவிதிகள்) செய்யும் விஷயங்களிலும் இன்னும் அனேக விஷயங்களிலும் நான் பாடுபட்டு வந்திருக்கிறேன். நான் கௌன்ஸிலில் இருந்த மூன்று வருஷங்களிலும் ஒரே முறை தேக அஸௌக்கியத்தாலும் மூன்று முறை என் வீட்டில் நேர்ந்த அஸந்தர்ப்பந்தாலும் கௌன்ஸில் மீட்டிங்குக்குப் போகவில்லையே யொழிய மற்ற மீட்டிங்குகளில் ஆரம்ப முதல் கடைசி வரையில் ஆஜராயிருந்து என் அபிப்பிராயங்களை வெளிப்படையாய் எடுத்துச் சொல்லி என் கடைமையைச் செலுத்தியுமிருக்கிறேன்.

ஆகையால் நீங்கள் என்னை மீண்டும் கௌன்ஸில் ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கும் பக்ஷத்தில் என்னாலியன்ற அளவு ஊழியம் செய்யத் தயாராயிருக்கிறேன்

தஞ்சாவூர் 14—6—20 இங்ஙனம் தங்கள் ஊழியன், T. R. ஸ்ரீனிவாஸ ஐயங்கார்

# வர்த்தகமித்திரன் புக்டிப்போ,

## எல்லையம்மன்கோவில் தெரு, தஞ்சாவூர்.

நமது வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி நமது பத்திரிகை ஆபீஸில் ஒரு புத்தக ஷாப் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த புஸ்தக ஷாப்பில் பள்ளிக் கூடங்களுக்கு வேண்டிய எல்லா புஸ்தகங்களும், தமிழ், இங்கிலீஷ் நாவல்களும், மதசம்பந்தமான புஸ்தகங்கள்யாவும் குறைந்த விலைக்குக் கொடுத்துவர ஏற்பாடு செய்து வருகிறோம்.

நமது நேயர்கள் தங்களுக்குத் தேவையான புஸ்தகங்களுக்கு ஆர்டர் நம்மிடமே கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

### தொழில் சம்பந்தமான தமிழ் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| கணக்குப் பரிசோதனை | 1—0—0 |
| இன்ஷியூரன்ஸ் | 0—6—0 |
| ஆயில் என்ஜின் புஸ்தகம் | 1—8—0 |
| நெல் ,, | 1—0—0 |
| சோளம் ,, | 0—2—0 |
| கரும்பு ,, | 1—0—0 |
| மாம்பழம் ,, | 0—7—0 |
| இந்திய கைத்தொழில் முயற்சி | 1—0—0 |
| தோட்டக்கால் சாகுபடி | 0—2—6 |
| தென் இந்தியா விவசாய நூல் | 1—4—0 |
| மணிலாக்கொட்டை சாகுபடி | 0—1—0 |

### நாவல்கள்

| | |
|---|---|
| ஆயாஷா பார்ட் 1 & 2. | 1—12—0 |
| மாண்டி கிருஷ்டோ I. | 1—8—0 |
| ஷை II. | 1—8—0 |
| இந்திராணி அல்லது இந்திரபுரி ரகசியம் | 1—4—0 |
| தெய்வலோக கிருமினல் கேஸ் | 1—8—0 |
| சுகுண தீரன் I | 1—0—0 |
| ஷை II | 1—4—0 |
| அஞ்சனாக்ஷி I | 1—0—0 |
| ஷை II | 1—4—0 |
| மேஹலதா | 1—0—0 |
| சாணக்கிய சாகஸம் அல்லது சந்திர குப்த சரிதம் | 1—4—0 |
| ஐரோப்பிய மகா யுத்தம் | 1—8—0 |
| ராஜ சேவையும் இந்தியரும் ஜஸ்டிஸ் அப்துல்ரகிம் மறுப்புரை | 2—0—0 |
| மிருச்ச கடிகம் | 1—8—0 |
| கலாவதி ,, | 1—8—0 |
| தமிழ் மொழியின் வரலாறு | 2—0—0 |
| ஸ்ரீயாகக்ஷத்திரிய குலப்பிரகாசிகை | 1—4—0 |
| ஆங்கில சிரோமணிகள் | 0—12—0 |
| கன்னியின் முத்தம் I | 0—12—0 |
| ஷை II | 0—14—0 |
| ஷை III | 0—12—0 |
| ஷை IV | 0—12—0 |
| சுந்தர் ராஜா அல்லது கட்பு | 0—12—0 |
| ஸாக்ரடீஸ் ,, | 0—12—0 |
| வியாஸவிதானம் ,, | 0—12—0 |
| ரோஜாலி அல்லது தீவின் அரசி | 0—12—0 |
| மாலினி மாதவம் | 0—10—0 |
| ஒற்றன் ,, | 0—10—0 |
| நாடகவியல் ,, | 0—12—0 |
| ஆங்கில மாயாவினோதக் கதைகள் | 0—6—0 |
| ரமணி ,, | 0—8—0 |
| மோகனா ,, | 0—5—0 |
| பவளக் கொடி ,, | 0—3—0 |
| அல்லி ,, | 0—3—0 |
| தேசிங்கு மன்னன் ,, | 0—3—0 |
| ராதாராணி ,, | 0—2—0 |
| ஜெயவீரன் ,, | 0—2—0 |
| இரண்மயி ,, | 0—2—0 |
| ஐங்கதைக் கொத்து ,, | 0—4—0 |
| சத்திய பாலதேவி ,, | 0—1—0 |
| அரிச்சந்திரன் ,, | 0—2—0 |
| பங்கஜாக்ஷி ,, | 0—8—0 |
| பிரக்லாதன் ,, | 0—8—0 |
| சின்னத்தம்பி ,, | 0—4—0 |
| விக்டோரியா நல்லரசி | 0—2—6 |
| அலாவுதீன் அற்புத தீபம் | 0—2—6 |
| ஐந்தாவது ஜார்ஜ் மகாராஜா மகிமை | 0—2—0 |
| சிம்பலீன் ,, | 0—2—0 |
| மாக்பெத் ,, | 0—2—0 |
| நற்பழக்கம் ,, | 0—2—0 |
| விரோனா நகரத்து விடர்கள் | 0—2—0 |
| நீதி கோபுரம் ,, | 0—2—0 |
| வேனிஸ் நகரத்து வர்த்தகன் | 0—2—0 |
| டிக்உன்டிங்டனும் அவன் பூனையும் | 0—2—0 |
| கர்மயோகம் ,, | 0—2—0 |
| மாயூரம் இடப தீர்த்தம் | 0—2—0 |
| 40 திருடர்கள் ,, | 0—3—0 |
| கபோதம் காட்டிய நேர்மையும் ஊட்டிய போதமும் | 0—2—0 |
| ஆபத்தில் சிநேகிதன் | 0—1—6 |
| செங்கைவளவன் | 0—1—6 |
| வீண்வம்பு ,, | 0—1—6 |
| சண்டியை சாதுவாக்கியது | 0—1—6 |
| வியாமோக விலாசம் | 0—1—6 |
| செம்படவன் ,, | 0—1—6 |
| மெய்தாசன் சரித்திரம் | 0—1—3 |
| 3 தங்கமாம்பழம் ,, | 0—1—0 |
| கண்ணும் கண்ணீரும் | 0—1—0 |
| பச்சை தேவதை ,, | 0—1—0 |
| நல்லமாப்பிள்ளை ,, | 0—1—0 |
| நாய்காட்டிய நல்லறிவு | 0—1—0 |
| கார்காலத்துச் சந்திரிகை | 0—1—0 |
| புலவர் வறுமை ,, | 0—1—0 |
| சண்டமாருதம் ,, | 0—1—0 |
| நான்கு பாடகர்கள் ,, | 0—1—0 |
| குசேலன் ,, | 0—1—0 |
| நைடிங்கேல் அம்மையார் | 0—1—0 |
| தாரில்லா கதவு ,, | 0—1—0 |
| ஸ்ரீ ருமஜனனம் ,, | 0—1—0 |
| காதர் அலி ,, | 0—0—6 |
| பிரசண்ட மாருதம் ,, | 0—8—0 |
| பிராப்டிங் னுக் யாத்திரை | 0—6—0 |
| லிலிபுட் யாத்திரை | 0—4—0 |
| லபுடா யாத்திரை ,, | 0—4—0 |
| ரஜபுத்திர ரத்தினம் | 0—5—0 |
| ஸ்ரீமத்வால்மீகிராமாயணம் சுந்தரகாண்டம் | 1—10—0 |
| ஷை காலிகோ பயிண்டு | 2—0—0 |
| தனிப்பாசுரத் தொகை காலிகோ பயிண்டு | 1—0—0 |
| பாயிர விருத்தி | 1—0—0 |
| பாவலர்விருந்து சாதா பயிண்டு | 0—8—0 |
| ஷைபாவலர் விருந்து காலிகோ பயிண்டு | 1—0—0 |
| ஸ்ரீ வைஷ்ணவகிரந்த மோக்ஷம் | 2—0—0 |
| நித்தியாது சந்தானம்சந்தானம் | 1—8—0 |
| கம்பர் ,, | 0—12—0 |
| முத்தக்குமாரசாமிபிள்ளைத் தமிழ் | 0—6—0 |
| அசோகா ,, | 0—4—0 |



(2-ம் பக்கம் தொடர்ச்சி.)

நம் ஜனங்களுக்கு போதிக்க முயல்வது ஸாத்தியமான விஷயமே. இச் சிலாக்கியமானவும் பொருப்பு நிறைந்தவுமான தமது நோக்கம் கை கூடுமென நான் மனஸ் பூர்த்தியாய் விரும்புகிறேன். தாமெடுத்த விஷயம் எவ்வளவு தூரம் கை கூடினபோதிலும் அம்மட்டில் அது தேச ஸேவையாகும்.

தஞ்சை, ஸ்ரீமான் திவான் பகதூர் P. கேசவப் பிள்ளையவர்கள்.—

தமது பத்திரிகையின் நோக்கத்தைக் கேட்க நிரம்பவும் சந்தோஷப் படுகிறேன். நம்மவருக்குள் வாஸ்தமாகவோ அல்லது கல்பிதமாகவோ ஏற்படும் அபிப்பிராய பேதங்களை முன்னிட்டு நமது நாட்டு முன்னேற்றத் திற்கேற்ற தொண்டு செய்யும் வழிகள் வேறுபட்டு நமக்குள் கக்ஷிப் பிரதி கக்ஷிகள் அதிகரித்து சில சமயம் ஒருவரையொருவர் அவதூராய்ப் பேசி அஸங்கிய வழிகளில் தாக்கும்படி நேர்ந்திருக்கும் இத் தருணத்தில் ஸமரஸத்தையும் ஒற்றுமைப்பையும் அதிகப் படுத்த முன்வரும் ஒரு பத்திரிகை அத்யாவசியமாகும். இம் மேலான கருத்தை தனது பத்திரிகை மறந்து ஒருக்காலும் பின் வாங்காது என்று நம்புவதுடன் அது ஓர் இனத்தார் அல்லது வகுப்பாரைச் சார்ந்த பத்திரிகையென பிறர் முறையிட இடங் கொடாதெனவும் எண்ணுகிறேன்.

தவிரவும் சிம்மளம் முதலிய பிற நாட்டுக்குப் போய் அன்னிய தேச முதலாளிகளின் கீழ் கூலி வேலை செய்து ஜீவனஞ் செய்ய நமது சகோதரர்கள் திரள் திரளாய்க் குடியேறப் புகுதலைப் பற்றி தாம் இடை விடாது கண்டித்துப் பேசுவதுடன் நமது நாட்டுப் பண்ணையாட்களின் பரிதாப நிலைமையை மாற்றி நமது மிராசுதாரர்கள் லாபத்திற்காகவும் க்ஷேமத்திற்காகவும் பாடுபட்டு வருமெனவும் அன்னவர் விஷயத்தில் அம்மிராசு தாரர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்பையும் நன்குணரும்படி செய்வீரெனவும் நம்புகிறேன்.

கும்பகோணம், ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் ராவ்பகதூர் N. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள். B. A., B. L.,—

தாம் நடத்த முன் வந்திருக்கும் பத்திரிகை மாதிரி நமது ஜில்லாவுக்கு ஓர் பத்திரிகை வேண்டுமென வெகு நாளாய் பலராலும் கருதப்பட்டிருந்தும் பல காரணங்களை முன்னிட்டு இவ்விதப் பத்திரிகை ஸ்தாபனம் செய்வது அஸாத்தியமாயிருந்தது. இதற்கு முக்கிய காரணம் ராஜாங்கத்தார் பத்திரிகை ஸம்பந்தமான சட்டத்தை இது காறும் சற்று கடினமாய் அமுலுக்குக் கொண்டு வந்ததேயாகும்

தாம் இப் பெரும் அலுவலை நிர்வகிக்க முன் வந்திருப்பதையும் இது விஷயத்திலுள்ள ஆரம்ப கிரமங்களை ஒருவாறு கடந்து விட்டீர்களெனும் சுப ஸூசகத்தையும் நோக்க நான் மிகவும் ஸந்தோஷப் படுகிறேன். நமது மாகாணத்தில் ஸமீபத்தில் நேர்ந்துள்ள மிகவும் வியஸனிக்கத் தக்க கக்ஷிப் பிளவுகளைப் பற்றி என் அபிப்பிராயங்களையும் நான் அதைப்பற்றி பல முறையும் என் அனுதாபத்தை வெளிப்படுத்தி யிருக்கிறேனெனவும் தாமறிவீர்கள். இப்பிளவுகளை உண்டாக்கிய காரணங்கள் பல வெனினும் நாம் சற்று உற்று நோக்கிப் பார்க்கின் இதன் மூல காரணத்தை நம்மில் எவரும் கண்டு பிடிப்பது அஸாத்தியமன்று இதென்னவென்று நான் சொல்லப் புகின் ஒரு சமயம் நம் நேயர்களிற் பலருக்கு மனக்லேஸம் பிறக்கலாம். அவர்களுள் ஒவ்வொருவரும் இதற்கு முன் நமது தாய் நாட்டுக்கு அரும் தொண்டு புரிந்திருப்பதை நோக்கு மிடத்து நாம் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆனால் தற்காலத்தில் நம்மைச் சுற்றிலுள்ளவையெல்லாம் வெகு விரைவில் மாறி வருகையில் அவர்கள் சற்று பின் வாங்கி நிற்பதை எடுத்துக் காட்டினால் நம்மேல் மனங் குவியாது நம்முடன் ஒருவரைப் படுவார் என நம்புகிறேன்.

நமது தேசத்து ஜனங்கள் ஓரினப் பட்டு வருவதற்கு ஸாதனமாயுள்ள முன்னேற்றத்திற்கு விரோதமாய் ஓங்கி நிற்கும் இடையூறுகளை நீக்குவதையே முக்கிய கருத்தாய் வைத்துக்கொண்டு மாறுபட்டுக் கிடக்கும் இந்திய ஜன சமூகங்களை ஒன்றுக்கவும் திக்கு நெறி தெரியாமல் இழுத்துச் செல்லும் நம்மவரில் பலரை ஒருங்கு சேர்க்கவும் இன்னாரில் முன் வருபவரே ஒரு மஹா புருஷராவர். இப்பேர்ப் பட்ட காரியத்தைக் கை கூடச் செய்ய முயல்வதே எந்த தீர புருஷனுடைய மனதையும் பின வாங்கச் செய்யும். எனினும் இம் முயற்சியை நமது தேச முன்னேற்றத்தை உத்தேசித்து நாமொரு நாளும் கை விடக் கூடாது. தமது பிரயத்தனம் வேறிடங்களில் எவ்விதம் பலப்படினும் நமது ஜில்லாவில் மாத்திரம் விருதாவாகாது என எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஏனெனில் நமது ஜில்லா வாசிகள் எப்பொழுதும் நிதானபுத்தியிற் சிறந்தவர்களாதலாலும் அவருள் மேலே சொல்லிய வேறுபாடுகள் தெய்வச் செயலாய் ஓங்காதிருத்தலுமேதான்.

ஜன்ம பூமியின் தொண்டில் என்ன நேர்ந்த போதிலும் தாம் கடைப்பிடித்த நோக்கம் நிச்சயமாய் நிறைவேறும். எடுத்த கருமத்தை திருந்தச் செய்வதில் தான் தமக்கு அதிகாரமே யொழிய அதன் பலனில் தமக்கு யாதொரு ஸம்பந்தமுமில்லை.

தவிரவும் "சாந்தி நிகேதனம்" கல்விச் சாலையிலிருந்து நமது இந்திய சகோதரர்களின் பிறப்பு உரிமைக்காக இந் நாட்டிலும் அயல் நாடுகளுக்குச் சென்றும் பாடுபடும் Rev. C. F. ஆண்ட்ரூஸ் துறையவர்களும் சென்னை மாகாணப் பெருங்கிழவ தேச பக்த சிகாமணியுமாகிய டாக்டர் S. சுப்பிரமணியஐயரவர்களும் நமது ஜில்லாவாஸியாகிய ஸ்ரீமான் கனம் V. K. ராமானுஜாச் சாரியாரவர்களும் Mrs. அன்னி பெஸண்ட் அம்மையவர்களும் ஆசி கூறி இப்பத்திரிகாசிரியருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

---

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

விட்டால் கறணங்கள் என்ன செய்வார்கள்? சாப்பாடு ஆயிற்று என்று வேலை வாங்கும் அதிகாரிகள் கேட்பதுண்டோ; இல்லை. அமுல் நடத்தி வேலை வாங்குகிறவர்கள் வெகுபேர். கிராம உத்தியோகஸ்தர்கள் சௌகரியத்தை கவனிக்கிறவர்கள் கிடையாது.

குமாஸ்தாக்கள் எப்போது சாப்பிடுகிறார்களோ ஆக்ஞைக்கு எதிர்பார்த்து வெகு நேரம் நின்றுகொண்டு கைகால் வலி கண்டபிறகு சாப்பிடப்போய் வரலாமாவென்று கேட்க சீக்கிரம் வந்துவிடும். நீர் சாப்பிட்டு வந்தவுடன் அதாவது இன்னும் ஒரு மணிக்கெல்லாம் தணிக்கை செய்ய ஆரம்பித்துவிடுகிறேன் என்று துரிதப்படுத்தி போகச்சொல்வார். வெகு நேரம் கச்சேரியில் காத்திருந்துவிட்டு கிளப்புக்கு அகாலத்தில் போனதும் அங்கு "சாப்பாடு ஆய்விட்டது" என்று கிளப்புக்காரர் சொன்னவுடன் இவர்கள் ஜீவன் அங்கேயே போனதற்கு மேலாய்விடும்.

சற்று உட்கார்ந்து பெருமூச்சு விட்டுவிட்டு கடைகளில் ஏதாவது பழங்கள் முதலானது வாங்கி தின்று விட்டு எங்கே திடீரென்று இல்லாத சமயத்தில் கூப்பிட்டு விடுவார்களோ; ஆஜரில்லாததனால் அபராதம் போட்டுவிடுவார்களோவென்று பயந்து ஓடிவந்து இந்த சமயங்களிலெல்லாம் மூட்டை தலையிலிருக்கும், இவர்களுக்கு மூட்டைவைக்கவும் உட்காரவும் கச்சேரியில் இடம் கிடையாது. தவிர எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் கீழ்பட்ட உத்தியோகமாய் அவர்கள் நினைத்திருப்பதால் அவர்களுக்கு முன்னிலையில் கறணங்கள் உட்காரக்கூடாது. உட்கார தனி இடம் கிடையாது. சாப்பாடுமில்லை. நின்றபடியே இந்த உத்ஸவங்களை தள்ளவேண்டும். பசி தாங்குமோ என்றால் கறணனுக்கு பட்டிணி உடன்பிறப்பு என்று சாதாரண வசனமாய் சொல்வார்கள். அதை ஜமாபந்தியில் பார்த்துக்கொள்ளலாம். ஜமாபந்தி வர்ஷத்திய உத்தியோகஸ்தர்களாகிய குமாஸ்தா வகையறுக்களுக்கோ ஏராளமான சப்ளை கிராம உத்தியோகஸ்தர்களது செலவில் நடந்து வருகிறது. வெய்யில் கொடுமை அவர்களுக்கு தெரியாது. நல்ல பந்தல்கள் போடுவதுண்டு. காத்து நிறம்ப வரகூடிய பெரிய கட்டிடம் சாப்பாடுகள், இடைவேளை போஜனங்கள், சந்தனம் தாம்பூலாதிகள், வேஷ்டி துவைக்க, எண்ணை தேய்க்க ஆள்கள், இன்னம் அநேக சௌகரியங்கள் உண்டு. இத்தனை வைபவமும் கிராம உத்தியோகஸ்தர்கள் செலவினலாயிற்றே என்று எண்ணி யாராவது ஒரு கறணம் கூட அவர்களுடன் சாப்பிட உட்கார்ந்து விட்டால், கறணன் சமபந்தியாக தைரியமாய் உட்கார்ந்து சாப்பிடும்படி ஆய்விட்டதா என்கிற ஆத்திரம் உதித்து விடுகிறது. பிறகு அந்த கறணனுக்கு அஷ்டமத்து சனிதான். கனம் டாட் ஹண்டரிடம் கிராம உத்தியோகஸ்தர்கள் தூது போனபோது இப்போதும் சப்ளை நடந்து வருகிறதென்று தெரிவித்துக்கொண்டார்களாம். கவர்ன்மெண்டார் அதை கவனித்து என்ன பரிகாரம் தேடினார்களோ தெரியவில்லை.

இப்போது தஞ்சை ஜில்லாவில் பாபநாசம், தஞ்சாவூர், இந்த இரண்டு தாலூகாவிலும் ஜில்லா கலெக்டர் அவர்கள் ஜமாபந்தி நடந்து வருகிறது. அதில் பாபநாசம் ஒருவாறாக முடிந்து விட்டது. தஞ்சையில் ஜமாபந்தி நடந்து வருகிறமாதிரியை சொல்லுகிறேன். தாலூகாவை விட்டு உசூர் என்னும் கலெக்டராபீசுக்கு தணிக்கையாக ஜாப்தா வாங்கி கொண்டு சிரஸ்தார் அவர்களிடம் போனதும் பாரபக்ஷமின்னியில் குமாஸ்தா ஒருவர் விடாமல் வரிசையாக கணிக்கை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வட்டம்போடுகிறார் சில வட்டத்தில் இரண்டு கிராமங்களுக்கு ஒரு கறணமிருக்கிறார். ஒரே வட்டமாயிருப்பதால் இரண்டையும் சேர்த்து ஒரே கரணம் பார்த்தால் அவர்களை ஒரே பேர்வழியிடம் போடாமல் ஒரு கிராமத்தை ஒரு

வரிடமும் மற்றொரு கிராமத்தை ஒருவரிடமும் போடுகிறார்கள். இதில் சர்விஸ் குறைவான குமாஸ்தாவென்றோ, சர்விஸ் ஜாஸ்தியானவராயிற்றோ, வயதில் சிறியவரென்றோ, வயதில் பெரியவரென்றோ, தணிக்கை செய்ய தெரியாதவர் என்றோ தணிக்கை செய்யத் தெரிந்தவரென்றோ, வேறு இன்னும் யாது காரணத்தை கொண்டோ, சின்ன குமாஸ்தாவிடம் தணிக்கை போட்டவட்டங்கள் பெரிய குமாஸ்தாவிடமும் தணிக்கை மேல் தணிக்கையாக இன்னுமொரு முறை சோதனை செய்துகொண்டு பிறகு சிரஸ்தார் அவர்களிடம் வரவேண்டும். முன்சொன்ன குமாஸ்தாவாகிய சின்னவருக்குவேலை தெரியாமல் கறணன் சோதனை செய்யும் வழியை சொல்லிக்கொடுத்துவிட்டு அவருக்கு புரியும்படி செய்து இப்படி செய்வதில் கச்சேரிக்கும் குமாஸ்தா வீட்டுக்கும் இளைப்புக்குமாக பல நாள் அலைந்துவிட்டு இரண்டாமுறையாக முன்சொன்ன குமாஸ்தா சரியாய் பார்த்தாரா என்பதை சர்டிபிகேட் பெற்றுக்கொள்ள அடிமுதல் மறு முறை பெரிய குமாஸ்தாவிடம்போய் அவர் சொன்னவேலைகளெல்லாம் கேட்டுவிட்டு இம்மாதிரி முறையில் பலநாட்களும் ஆக சுமார் 15 or 20 நாளுக்கு மோசமில்லாமல் அலைந்து திரிந்து கை காசுகளை தொலைத்துவிட்டு கடன்பட்டுவிட்டு சிரஸ்தார் அவர்களிடம் போகவேணும். இனும் திறப்பு இரண்டு கிருமம் உள்ளவர்களுக்கு இம்மாதிரியே நாலு குமாஸ்தாக்களிடம் உசூர் தணிக்கை ஆகிறது. ஒரே பேர் வழிக்கு இரண்டு வட்டம் வேலை, இரண்டிடம் தணிக்கை, ஒருவர் சாப்பிடும்போது மற்றொருவர் சாப்பிடுவது, இம்மாதிரியே உரலுக்கு ஒரு பக்கத்திலிடி, மத்தளத்துக்கு இரண்டுபக்கத்திலிடி என்பதாக அவஸ்தைப்படுகிறது. உசூரில் ஒரே குமாஸ்தாவிடம் தான் இதற்கு முந்தின வருஷங்களில் தணிக்கை ஆய்கொண்டுவந்தது இந்த வருஷத்தில் இம்முறை அனுஷ்டித்து வருகிறார்கள். முந்தின குமாஸ்தாவின் தணிக்கைக்கு என்ன அர்த்தம். யாது பிரயோஜனம், கறணங்களுக்கு கஷ்டத்தைத்தவிர வேறு என்ன பிரயோஜனம், இதை உத்தேசித்து தான் வட்டத்தைவிட்டு வெளியூர்களில் தங்கின நாள்களுக்கு படி கொடுங்களென்று கவர்ன்மெண்டாரிடம் தூதுபோனபோது கேட்டார்கள் (உத்திரவு பிறந்திருக்கிறது) இம்மாதிரி மெனக்கெடுகிறார்களே மேலதிகாரிகள் கவனிப்பதுண்டோ, குறிப்பிட்ட தேதி போட்ட ஜமாபந்தி இல்லாததால் மாதக் கணக்காய் இஷ்டம்போல் மெனக்கடுகிறார்களே. தினமாகப்படி ஏற்படுத்திகொடுப்பார்களோ, கவர்ன்மெண்டார் இதில் கவனம் செலுத்துவார்களோ, பத்திராதிபர் கறணங்கள் குறைகளை எடுத்து எழுதுவார்களோ எத்தனை வட்டங்கள் இரண்டு இரண்டு முறை தணிக்கைசெய்வதால் மெனக்கடு ஆயிருக்கிறதென்று கவர்ன்மெண்டார் கணக்கு எடுப்பார்களோ? இதற்குகேள்வை எப்போது பிறக்குமோ ஜமாபந்தி துலைந்தாலொழிய கறணங்களை பிடித்த கஷ்டம் நிவர்த்தி ஆகபோகிறதில்லை. ஆடிட்டர் நியமித்து ஊர் ஊராகப்போய் கணக்குகளை தணிக்கை செய்ய சொல்லகூடாதோ?

கஷ்டப்பட்டோன்.

## கல்வியபிவிருத்தி.

மாக்ஷிமை தங்கிய பார்லிமெண்டில் தற்போது நிறைவேறிய இந்திய அரசாங்க சீர்திருத்தச் சட்டத்தில் காணும் முக்கிய அம்சம் என்னவென்றால் கல்வி இலாகா இனி இந்திய மந்திரிகளின் வசம் ஒப்புவிக்கப்பட்டிருப்பதேயாம். ஆகவே நமது தேச கல்வியபிவிருத்திக்கு இனி நம் சட்டசபையில் மெம்பர்களாய் வரப்போகும் கனவான்களுள் தேர்ந்தெடுக்கப்படும் மந்திரியாகிய இந்தியரே பொறுப்பாளர் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

“வோட்” சுதந்தரத்தை அடைந்த நாம் இனி கல்வியபிவிருத்தி எந்தெந்த வகையில் செய்யலாம் என்பதை ஆழ்ந்துணர்ந்து அந்த நோக்கத்தின்படி வேலை செய்வோரையே நமது சட்டசபையில் அங்கத்தினராய் அமரச்செய்யவேண்டும். அவர்களும் தேச நன்மை, தேசமுன்னேற்றம் பொது ஜனங்களுக்கு ஞானம் ஊட்டும் முறை, எவ்வித ஞானம் ஊட்டினால் பொது ஜனங்கள் தேசத்துக்கு கௌரவத்தை விளைவித்துப் பாரத மாதாவின் உண்மை மக்கள் என்னும் புகழை அடையலாம் என்னும் விஷயம், ஆகிய இந்த மாதிரியானபல பெரு நோக்கங்களுடன் கல்வி சீர்திருத்தம் செய்யவல்ல அங்கத்தவர்களை தேர்ந்தெடுத்து அவருடன் ஒத்துழைத்து கல்வியபிவிருத்திசெய்யத் தருணம் வந்திருக்கிறது.

இத்தருணத்தில் கல்வி இப்போதிருக்கும் நிலை என்ன? அதில் உள்ள குறைகள் என்ன? அந்தக் குறைகளை அகற்ற வழி என்ன? ஆகிய இவையெல்லாம் நமது முக்கிய லக்ஷியமாயிருக்கவேண்டும்.

கல்வியின் நிலையை முதலில் கவனிப்போம். நம் தேசக் கல்வி, மூன்று அந்தஸ்தாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பிரதமப் படிப்பு, உயர்தரப்படிப்பு, கலாசாலைப் படிப்பு என்பவையாம். பிரதமப்படிப்பு. 1896 வருஷம் வரையிலும் உயர்தரப் படிப்புடன் சம்பந்தமுள்ளதாய் இருந்துவந்தது. ஆனால் அந்த வருஷத்தில் எலிமெண்டரி படிப்பும், ஸெகண்டரி படிப்பும் வெவ்வேறு நோக்கமுள்ளவைகளாய்க் கருதப்பட்டு அவை பிரிக்கப்பட்டுள்ளன. எலிமெண்டரி படிப்புக்குத் தேவையான உபாத்தியாயர்கள் வேறு ஸெகண்டரி உபாத்தியாயர் வேறு அதற்கு சம்பள வீதம் வேறு, இதற்கு சம்பள வீதம் வேறு, அதற்குப் பாடங்கள் வேறு இதற்குப் பாடங்கள் வேறு, இப்படி பகுக்கப்பட்டு தாரதம்மியம் ஏற்பட்டிருப்பதை இப்பத்திரிகை படிப்பவர் யாரும், அறிந்திருக்கலாம்.

ஆனால், கலாசாலைப் படிப்புக்கும் ஸெகண்டரிப் படிப்புக்கும் உள்ள சம்பந்தமோ மேலே காட்டியதைக் காட்டிலும் ஒரு வாறு நெருங்கியதென்று காணலாம். கலாசாலையில் நடைபெறும் கல்வி இங்கிலீஷ் பாஷை மூலமாய் போதிக்கப்படுகிறது. அதனை ஒட்டி ஸெகண்டரி படிப்பும் இங்கிலீஷ் பாஷை மூலமாய் போதிக்கப்பட்டு வருகிறது. ஆனால், எலிமெ[illegible]ரி படிப்பு மட்டில் தேச பாஷை மூலமாய் போதிக்கப்பட்டு வருகிறது. அதாவது நமது கல்வியில் விசேஷம் என்னவெனில் தேச பாஷையின் அதிகாரம் எலிமெண்டரி படிப்புடன் ஒழிந்துவிடுகிறது. ஸெகண்டரி படிப்பாளிகளும், கலாசாலை வித்தியார்த்திகளும் தேச பாஷையை உபயோகிக்க இடமற்றவர்களாக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் முக்கிய பலன் என்ன வென்றால் இங்கிலீஷ் படிப்பு வாய்ந்தவர்கள் தேச பாஷைப் படிப்பு வாய்ந்தவர்களை பறிந்து அவருடன் ஒத்துழைக்கத் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள், அதை கிராமவாசிகளும் கிராமங்கள் விடுமுறை நாளில் பார்க்கச் செல்லும் இங்கிலீஷ் படித்த நம் கனவான்கள் யாவரும் அறிவர். இவர்கள் இருவரும் ஒற்றுமைத்தாலன்றி தேச ஊழியம் சரிவர நடைபெறாது. இது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம்.

இங்கிலீஷ் பாஷை மூலமாய் கல்வி போதிக்கவேண்டும் என்னும் விஷயம் சரித்திர மூலமாய் எப்படி நடந்தேறியது என்று நாம் இனி ஆராயவேண்டும்.

ஆதியில் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்தியாவுக்கு அட்சி செய்யவந்தபோது. தங்கள் ஊழியத்துக்காக வென்று இங்கிலீஷை முதலில் ஜனங்களுள் புகவிட்டார்கள். அவர்கள் வந்தபோது, பாதிரிமார்களும் கூடவே வந்து, பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி இங்கிலீஷ் பாஷையைப் பரவச்செய்து இந்திய புஸ்தகங்களைப் படித்து சாஸ்திரம் வேதம் சட்ட புஸ்தகங்கள் இவைகளை பொழி பெயர்த்தார்கள். பல [illegible]களில் 1813 ஷு முதல் 1856 ஷு [illegible]ரையில் தேசப்படிப்பு விஷயமாய் யோசனை நடந்து கடைசியில் மெக்காலே என்னும்கனவானது பெரும் செல்வாக்கினால் இங்கிலீஷ் பாஷை தேச படிப்பில் நுழைந்துவர வர ஓங்கி இந்தியப் பாஷைகள் தாழ்ந்து தேசப் படிப்பு பரவு வதற்கு தடைபட்டு நிற்கிறது. இது விஷயத்தை விவரமாய் அடுத்தாற் போல் விசாரிப்போம்.

(இன்னும் வரும்)

போதகாசிரியன்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellai-amm[illegible] koil Street, Tanjore.

Home Misc Dep

[C No. 3482] From the Editor, 'Samarasabhodini' d/ 8. 7. 20
Endt to the D.M. Tanjore No. 3482-1913.7.
[C No. 3688] From the D.M. Tanjore Rc No. 1595/07 of 1920
d/ 23. 7. 20

E. T. Privileges

U.S.

The circulation of the paper is only 500. In the notes to G.O. no 1351 d/ 30. 9. 19, it ~~was provided~~ has been x decided that papers having a circulation of 800 & over may be granted E.T. privileges irrespective of their tone & conduct. The paper in question does not satisfy this condition — From the specimen copies sent by the D.M. Tanjore it will be seen that the paper deals with social, educational, economic & other ~~ma~~ general matters. The D.M. does not say whether he recommends the grant of E.T. privileges or not.

x p 3 of the notes to the G.O. at P

2. For orders whether the request of the Editor may be ~~complied with~~ refused

RH
3.8.20

[illegible]
4

May be refused

[illegible] 5/8/20

C.No. 3688

U.S.

Draft order subd.

Issue 10/13

7/8/20.

S.P.
6.8.20

Sd/ 6.8.20

13

Sectt. II—10 (b)—12-1-15. Editors' Table Home (mis) DEPARTMENT

Privileges – Samarasabodhini – Declined

14

READ AGAIN G.O. No. ........, dated ........ 191 .

" " " ........, " ........ 191 .

READ ALSO:—

I

C. No. 3482, From the Editor Samarasabodhini, No. ........, dated 8 July 1910.

II

" " Endt No. 3482-1 Home (mis), " ........, " 13 July 1910.

III

" " 3688, " " D.M. Tanjore, " 1595, " 23 July 1910.

ORDER. No. 1283, dated 2/8 191 .

mis

The Editor, the Samarasa-Bodhini, Tanjore is informed that the Govt. are unable to accede to his request.

7/8/10

Dispd 8/9/8/10

To

The Editor, Samarasabodhini, Tanjore (gof I & O)

The D.M. Tanjore (g&O)

The Publicity Officer. (g&O)

S.P.P. 6.8.20

6.8.20

…given for copying
…n copied 192
…n examined
…n signed

…AD AGAIN G.O. No. , DATED
192 .

CURRENT No.

ENCLOSURES TO C. No.

ORDER OF GOVERNMENT .. .. .. .. A A A A A A A

LETTER OF GOVERNMENT.

STATEMENT WITH DITTO.

PAPERS NOT FILED UP, BEING MEANT FOR DESPATCH IN ORIGINAL.

*N.B.—*
A = Copy in full.
B = Not to be copied.
P = Copy abstract only.
Q = Copy heading only.